கனகத்தூதன்

Canadian Tamil Catholic Messenger

CanaCaThuthan

Vol: 05 No: 10 March 27, 2010 மலர் :05 இதழ் :10


Publication Mail Agreement :414160
Return Undeliverable Canadian Addresses to:

The Canadian Tamil
-Catholic Messenger
19 Callowhill Ave.
Richmont Hill, On. L4B 4H5

கிறிஸ்து உயிர்ப்பு சிறப்பிதழ்


Special Issue on Easter

அனைவருக்கும் கிறிஸ்து உயிர்ப்பின் வாழ்த்துக்கள்!




கனடாவின் புதிய புனிதராகும் ஆனந்ரே






றொறன்ரோவின் இரு புதிய துணை ஆயர்களும் அவர்களின் விருது வாக்கும்





அடக்கப்பட்ட
ஒடுக்கப்பட்ட
மக்களுக்காக
தம் உயிரப்பலி
கொடுத்த அருட்பணி
பஸ்ரியன் பேராயர்
ஒஸ்கார் ரொமேரோ





கனடா திருமறைக் கலா மன்றத்தின் காவியத் களம் 2010

உள்ளே:

- உலக, ஈழ, கனடிய கத்தோலிக்க செய்திகள்
- கரவையூர் செல்வம் வழங்கும் "சிலுவைப் பாதைச்" சிந்தனைகள்
- இன்னும் அர்த்தமுள்ள சுவையான தகவல்கள்

கனகத்தூதன் CanaCaThuthan
Canadian Tamil Catholic Messenger
Vol: 04 No: 07 July 11, 2009

ஆசிரியர்:
அன்ரன் சின்னராசா பிலிப்
Editor:
Anton Sinnarasa Philip
anton.philip@gmail.com
416.300.7026

நிர்வாகம்:
அஞ்சலோ சுவாம்பிள்ளை
Administration:
Angelo Swampillai

ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...

அன்பு நெஞ்சங்களே,

தவக்காலத்தை தொடங்கி தூய வாரத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். கிறித்துவின் பாடுகளையும் சிலுவை மரணத்தையும் பற்றி சிந்தித்து அவருடைய உயிர்ப்பில் பங்கு கொள்ள தயாராகின்றோம்.

இருளை தோற்கடித்து ஒளி உதயமானது
புாவத்தை வென்று புனிதம் புலர்ந்தது.

அடி பணிந்து பாதம் கழுவி விழுந்து சுமந்து இப்போது தனது உயிர்ப்பினால் வீழ்ச்சியில் எழுச்சியை உருவாக்கினார். சாவை சாகடித்தார் இயேசு. அதன் விளைவு வெறுமையான கல்லறை (மாற் 16:1-8) கல்லறை வெறுமையாகி சாவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஊயிர்த்த இயேசுவின் கல்லறைக்கு வந்தவர்களை கலிலேயாவுக்கு அனுப்புகிறார். ஏல்லோரையும் சீடாராக்குங்கள்(மத் 28:19) என்றும் என் ஆடுகளை மேய் என்றும் வழி நடத்தும் பணியை எடுத்துரைக்கின்றார். (யோவா 21:17)

இயேசுவின் உயிர்ப்பை திருத்தூதர் பவுல் "நாம் அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பபட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். அவர் இறந்தார். பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார். அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள். கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள். என்கிறார்.

உயிர்த்த அவர் தனது சீடர்களுக்கு முதலில் சமாதானம் என்றார். பிறகு தூய ஆவியின் கொடைகளைக் கொடுததார். இறுதியாக சவால்களை சந்திக்கும் சக்தியைக் கொடுத்தார். இவைகள் இயேசுவின் உயிர்ப்பால் சீடர்கள் பெற்ற கொடைகளாகும். இயேசுவை சந்திக்காமல் நாம் அவரின் சாட்சிகளாக மாறமுடியாது. சிந்திப்போம. சூட்சிகளாவோம். அவரில் இணைவோம். சீடர்கள் உயிர்த்த இயேசுவைக் கண்டார்கள். நம்பினார்கள் என்றால் சாதாரண ஊனக்கண்களால் அல்ல மாறாக ஞானக்கண்களால் மட்டுமே உணர்ந்து கொள்ளமுடியும். சைவ சித்தாத்திலலும் இவ்வுண்மை அழகாக குறிப்பிடப்படுகின்றது. அப்பர் அடிகள் பாடுின்றார்.

அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே.

அதாவுது இறைவனின் அருள் இருந்தால்தான் அந்த அருளை கண்ணாக் கொண்டு அவன் யார் என்பதை அறியவும் எழுதவும் முடியும் என்கிறார். இயேசுவின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளும் நாம் எம்மக்களின் சுமைகளுக்கும் தொடரும் துன்பங்களுக்கும் விடுதலை இருக்கிறதா என்ற கேள்வியும் இவ்வேளையில் எம்மிடையே எழுகின்றது. 12 ஆயிரத்துக்கும் இளைஞர்களும் பெண்களும் சிறையில் வாட இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் முகாம்களில் அடிப்படை வசதிகளற்ற முறையில் வாழ்ந்து கொண்டிருக்க தேர்தல் என்ற நாடகத்தில் அனைத்தையும் மறந்து நமது உறவுகள் ஒற்றுமையின்மையின் விளிம்பில் நின்று கொண்டிருப்பது மனவேதனையை நிறைத்தது கொண்டிருக்கின்றது. நாம் யார் என்பதையும் நமது மக்களின் விடுதலைதான் எமது இலட்சியமா என்பதையும் கேள்விக் குறியாக்கிவிட்டது. கிறித்துவின் உயிர்ப்பு நமக்கு விடை பகருமா?

வாரத்தின் முதல் நாள் விடியற் காலையிலேயே தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக் கொண்டு அப்பெண்கள் கல்லறைக்குச் சென்றார்கள்: கல்லறை வாயிலிருந்து கல் புரட்டப்பட டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் உள்ளே நுழைந்தபோது அங்கே ஆண்டவர் இயேசுவின் உடலைக் காணவில்லை. அதைக் குறித்து அவர்கள் குழப்பமுற்றார்கள். அப்போது திடீரென, மின்னலைப் போன்று ஒளிவீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். இதனால் அப் பெண்கள் அச்சமுற்றுத் தலை குனிந்து நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அப் பெண்களை நோக்கி, உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்.

கனகத்தூதன் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. இச் செய்தித்தாளை அஞ்சலில் பெற விரும்புவோர் 10.00 டொலர்களை ***Canadian Tamil Catholic Messanger (CTCM)*** என்ற பெயரில் **19 Callowhill Ave. Richmont Hill, On. L4B 4H5** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். எமது விளம்பதாரர்களுக்கு துணை நிற்க தவறாதீர்கள். நன்றி

கனடாவின் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த அருட் சகோ. ஆந்திரே, தூயவர் கூட்டத்தில் சேர்க்கப்படவுள்ளார்.

"அவர் மிகவும் எளிமையுள்ளவரும் மற்றவர்கள்மட்டில் மிகவும் அன்பு இரக்கமுள்ள இதயம் கொண்டவரயிருந்தார்".

அருட் சகோதரர் ஆந்திரே, எளிமையான வாழ்வு வாழ்ந்தவர்.இவர் வாழ்ந்த காலத்தில் ஏழையாகவும், நோயினால் பாதிக்கப்பட்டும், கற்ற கல்வியை தொடர முடியாத நிலையில், கல்வியறிவில் முற்றுப்பெறாதவருமாக வாழ்ந்தவர்.

கியூபெக்கைச் சார்ந்த ஓர் சாதாரண சராசரிக் குடும்பத்தைச் சார்ந்த இவர் 1845ம் ஆண்டு 10 பிள்ளைகளைக் கொண்ட ஒரு மரத்தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குக் கொடுத்த பெயர் அல்பிறட் பஸ்ற, பின்னர் ஆந்தரே என்னும் பெயர் வளங்கப்பட்டது. இவரது 9வது வயதில் தந்தையை இழந்தார். 3 வருடங்களின் பின்னர், காசநோயினால் பீடிக்கப்பட்ட தாயையும் இழந்து அனதையானர். அனாதையான அல்பிறட், பள்ளிக்கூடப் படிப்பை தொடரமுடியாது வேலை தேடிச்சென்றார். இவரது உடல்நிலை காரணமாக வேலைகளில் தொடர்ந்து நிலைத்து நிற்க முடியவில்லை.

எனினும் 1860ம் ஆண்டு, பிரான்ஸ்-கனடா குடிபெயர்வாளாராக அமெரிக்கா சென்று 4 ஆண்டுகள் ஓர் புடவைத் தெழிற்சாலையில் வேலை புரிந்தார். இதைத்தொடர்ந்து மீண்டும் கனடா திரும்பி, தோழ்களில் சில உடைகளைச்சுமந்தவராக, கிறிஸ்துவில் முழு நம்பிக்கைகொண்ட ஒருவராக, இவரது 25வயதில், மொன்றியல் தூய திருச்சிலுவைச் சபையை, இற்றைக்கு 140 ஆண்டுகளின் முன்னர் சென்றடைந்தார். அங்கு இவர் முதலில் ஏற்றுக்கொள்ளப்படாவிடினும், பின்னர் ஒருவாறு சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் முதலில், மூட்டைப்பொதிகளைத் தூக்கிச்செல்பவராக (Notre Dame College) நேட்டே டாம் கல்லூரியில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இத்தொழிலில் தொடர்ந்து 40 ஆண்டுகள் ஊழியம் மேற்கொண்டார். இவர் நிலம், கண்ணாடி கழுவுதல், விளக்குகள் துப்பரவு செய்தல், மரக்குற்றி காவுதல், மாணவர்களுக்கு தலைமுடி வெட்டுதல், போன்ற பல்வேறுபட்ட வேலைகளைச் செய்துவந்தார்.



அவர் ஒருமுறை கூறிய வார்த்தைகள் "எனது உடல்நிலை பாதிப்பு இருந்தாலும், என்னை முன்னேறிச்செல்ல நான் ஒருபோதும் விடுவதில்லை" என்பதாகும். மேலும் "எனது இறப்பை நீங்கள் இழப்பாகக்கருதக்கூடாது, ஏனெனில் நான் கடவுளோடு இருந்து மேலும் கூடிய உதவிகளை உங்களுக்குச்செய்யமுடியும்" எனவும் கூறியுள்ளார். இத்தகைய வாழ்வு வாழ்ந்தவர் தூய சிலுவை சபையின் ஊழியன், இன்று மொன்றியலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு தரிசிக்கும் ஆலயமாகிய தூய வளனார் தேவாலயத்தின் ஸ்தாபகருமாகும். (St Joseph's Oratory) இன்று இத்தேவாலயம் ஒரு யாத்திரை ஸ்தலமாக (Royal Mount) றோயல் மவுண்ட் எனப்படும் மலையுச்சியில் நகரத்தின் வடபகுதியைப்பார்த்தவண்ணம் சிறப்புற விளங்குகின்றது.

சகோதரன் அந்திரே பின்வரும் 5 பண்புகளைக் கடைப்பிடித்துவந்தார்.

1-ஊழியம் -Work
2-செபம் -Prayer
3-சூழல் சுற்றுப்பறங்களைப்பேணுதல் -Enviroment & Ecology
4-விருந்தோம்பல் -Hospitality
5-எளிமையான வாழ்வு -Simplicity &Humble life

சகோதரர் அந்திரே, 1978ம் ஆண்டு (Pope Paul VI) திருத்தந்தை 6ம்சின்னப்பரினால் (Venerable) பூஜிக்கத்தக்கவர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1982ம் ஆண்டு, வைகாசிமாதம் 23ம் திகதி (Pope John Paul II) திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பரினால் (டீடயநளளநன) என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். 2010ம் ஆண்டு மாசிமாதம் 19ம் திகதி (Pope Benedict XVI) திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் சகோதரர் ஆந்திரே அவர்களை தூயவர்களின் கூட்டத்தில், எதிர்வரும் ஐப்பசிமாதம் 17ம் திகதி திருநிலைப்படுத்தவுள்ளார் என்ற செய்தியை வெளியிட்டுள்ளார். இச்செய்தி மொன்றியல், கியூபெக் மக்களை மட்டுமல்ல, முழுக்கனடா வாழ்மக்களையும் மகிழ்விக்கின்றது.



சகோதரர் ஆந்திரே தமது 92வயதில், தை மாதம் 6ம் திகதி இறைவனடிசேர்ந்தார். இவர் இறந்து 73வருடங்களின் பின்னரே தூயவராக திரு நிலைத்தப்படவுள்ளார். இவருடன்சேர்ந்து மேலும் 5 பேர் தூயவர்களின் கூட்டத்தில் சேர்க்கப்படவுள்ளனர். கனடாவில் பிறந்தவருமான (St.Marguerite d'Youville) தூயவர் மாகிறேட் டீ யூவிலிக்கு அடுத்ததாக சகோதரர் ஆந்திரே அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது

இவரது வாழ்வு காலத்தை ஆராய்ந்து பார்ப்பின் எளிமையான, கனிந்த இதயம்கொண்ட, இறைவனில் முழு விசுவாச நம்பிக்கை கொண்ட ஒருவராகவும், எப்பொழுதும் மகிழ்ச்சியாக மற்றவர்களை உபசரிக்கும் ஒருவராகவும் காணப்பட்டார். "I am nothing" "நான் ஒன்றுமில்லை" எனக்கூறும் வார்த்தைகள். "Only a tool in the hands of providence, a lowly instrument at the service of St Joseph" கடவுளின் கைகளாலான ஓர் கருவி. தூய வளனாரின் சேவையில் பணிவுள்ள ஓா கையாள் என தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இவரைப்பற்றி, (Fr.Jean-Pierre Aumont, Canadian Provincial Superior of The congregation of Holy Cross) திருச்சிலுவை சபையின் மாகாண அதிபர், அருட் தந்தை யோண் பீரீ ஆமெண்ட் பின்வருமாறு கூறியுள்ளார் "சகோதரன் ஆந்திரே கல்வியில் மந்தநிலையிலுள்ள ஒருவர் தனது பெயரையே சரியாக எழுதத்தெரியாத ஒருவர். கியூபெக் மக்களுக்குள் ஒருவர், ஆனால் அவர் மிகவும் எளிமையுள்ளவரும் மற்றவர்கள்மட்டில் மிகவும் அன்பு இரக்கமுள்ள இதயம் கொண்டவரயிருந்தார்".

இவர் அற்புதம், அதிசயம் நிகழும் வகையில் வேலை புரிபவர். "Miracle Worker" இவர் ஒரு குருவாக இல்லாவிட்டாலும் இன்றைய குருக்களுக்கு ஓர் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். இறை விசுவாசிக்கு ஓர் எடுத்துக்காட்டு. இவரிடம் வரும் நோயாளிகளைச் சந்தித்து, அவர்களைக் குணப்படுத்தும்போது, "இது கடவுளின் வேலை" எனத் தம்மைத் தாழ்த்திக்கொள்வார். தூய வளனாரின் முன்பாக எரியும் விளக்கின் எண்ணையை மக்களுக்கு எடுத்துத் தடவுவார். எனினும் குணமாக்கும் மருந்தாக செபத்தைப் பயன்படுத்திக்கொள்வார். இன்னமும் சகோதரன் ஆந்திரே, அதிர்ச்சியூட்டும் வகையில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவிடம் ஒன்று கூட்டிச்சேர்த்திருக்கின்றார். தீராத நோயினால் பீடித்த மக்கள் கூட்டம் அவரண்டை வந்து நோய் நீங்கி சென்றதாக பல ஆதாரங்கள் உண்டு. இவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றும் பல இன மத மொழிபேசும் பலதரப்பட்ட மக்கள் தூய வளனார் புண்ணிய ஸ்தலத்திற்கு யாத்திரையாக வந்து குணமடைகின்றனர். கத்தோலிக்கமதத்தினர் மட்டுமல்லாது, இந்து மதத்தினர், புரட்டஸ்தாந்து மதத்தினர் இவரது கல்லறை முன்பாக நாளாந்தம் ஆயிரக்கணக்கில் யாத்திரிகளாக வந்து புதுப்பெலனடைந்து செல்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் வாழும் எமக்கு, பூஜீக்கத்தக்க ஒருவராகவும் பரமானந்த நிலைக்கு உயர்த்தப்பட்ட ஒருவர் தூயவர்கள் கூட்டத்தில் சேர்க்கப்படவுள்ளார் என்ற செய்தி விடுக்கும் அறைகூவல் என்ன? அவருக்கும், இறைவனுக்கும் இடையிலான நெருக்கமான செப உறவு. அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல வாழ்வுக்குப்பின்னரும் அவருக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவு செபத்தின்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உறவு. எனவே, நாமும் அவரது வாழ்க்கை வரலாற்றுப்பின்னணியை அறிந்தவராக, அவரின்மூலம் கிறிஸ்துவண்டை எம் தேவைகளை மன்றாட்டுக்களை சமர்ப்பித்தும், அவர் வாழ்ந்து காட்டிய பாதையை நாமும் பின்பற்றியும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாகவும், சாட்சியாகவும் வாழ முன்வருவோம்.


ஆதாரம்: The Catholic Register. February 28th 2010
தொகுப்பு: மேரி சமா தேவநாயகம்.



விவிலியத் தேடல்:
"தாகமாயிருக்கிறது" என்ற இயேசுவின் கூற்று

இந்த வாரம் திங்கட்கிழமை, அதாவது மார்ச் 22, நாம் உலக தண்ணீர் தினத்தை அனுசரித்தோம். இன்று தாகத்தைப் பற்றி பேசுகிறோம். தாகம், தண்ணீர் இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல. ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை, பிரிக்க முடியாதவை.
கல்வாரியில் இயேசு கொண்ட தாகத்தை முதலில் சிந்திப்போம். கல்வாரியில் நிகழ்ந்ததாய் நான்கு நற்செய்திகளும் சொல்பவைகளைச் சேர்த்துப் பார்த்தால், இயேசுவுக்கு கல்வாரியில் குடிப்பதற்கு இருமுறை பானங்கள் கொடுக்கப்பட்டதென நாம் ஊகிக்கலாம். முதல் முறை இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட பானத்தை அவர் குடிக்க மறுத்தார். இரண்டாம் முறை அவரே தன் தாகத்தை எடுத்துச் சொன்னார். பாரமான சிலுவையைச் சுமந்து எருசலேம் வீதிகளில் நடந்து, விழுந்து, எழுந்து வந்த இயேசு, கல்வாரியை அடைந்ததும் அவருக்குப் பானம் ஒன்று கொடுக்கப்பட்டது. அந்த நிகழ்வைக் கூறும் நற்செய்தி இதோ:

மத்தேயு 27: 33-34
"மண்டையோட்டு இடம்" என்று பொருள்படும் "கொல்கொதா"வுக்கு வந்தார்கள் இயேசுவுக்குக் கசப்பு கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதைச் சுவை பார்த்தபின் குடிக்க விரும்பவில்லை.
கசப்பு கலந்த திராட்சை இரசத்தை இயேசு குடிக்க விரும்பவில்லை. காரணம்?... அந்த இரசம் அதிக குடிபோதையைத் தரும் வழக்கமாய் இந்த பானம் உடல் வலியை மறக்கக் குடிக்கப்படும். இயேசு அடைந்த வேதனையைப் பார்த்து உரோமைய வீரர்களுக்கே இரக்கம் பிறந்திருக்க வேண்டும். அவர் வலியைக் குறைக்க, அந்த வலியை அவர் மறக்க உதவும் எண்ணத்துடன் அந்த இரசத்தைக் கொடுத்தனர். இயேசு அதை மறுத்தார். தான் ஏற்றுக் கொண்ட துன்பத்தை இறுதி வரை முழுமையாக நிறைவேற்றும் எண்ணம் இயேசுவுக்கு.
துன்பத்தை உவந்து ஏற்கும் கடவுளைப் பற்றி சிந்திக்கலாம். வேதனையுறும் கடவுள், வலியில் துடிக்கும் கடவுள்... நினைத்துப் பார்க்கவே முடியாத ஒரு சொற்றொடர், ஓர் எண்ணம். பழைய ஏற்பாட்டில், கடவுளின் துன்புறும் ஊழியனைப் பற்றி எசாயா நூலில் கூறப்பட்டுள்ளது:



எசாயா 53: 4-8
மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார்: நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்... நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார். நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார். நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார். அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டார்: வாழ்வோர் உலகினின்று அவர் அகற்றப்பட்டார். என் மக்களின் குற்றத்தை முன்னிட்டுக் கொலையுண்டார்.

எசாயாவின் இந்த சொற்கள் இயேசுவுக்கான முன்னறிவிப்பு என்று கூறுகிறோம். கடவுளின் ஊழியன் துன்பப்படலாம், கடவுளே துன்பப்படலாமா? படலாம். துன்பத்தை நெபயவளைற ஆன, குறையுள்ள ஒரு கூறாகப் பார்ப்பதால்தான் கடவுளோடு அதைத் தொடர்பு படுத்தக் கடினமாயிருக்கிறது. ஆனால், துன்பத்தை positive கண்ணோட்டத்தோடு பார்த்தால், அதன் பயனை உணர்ந்தால், துன்புறும் கடவுளையும் புரிந்து கொள்ள முடியும்.

வலியின்றி குழந்தை பெறுவதற்கு பல வழிகள் உள்ளபோதும், வலியோடு குழந்தையைப் பெறும் தாயைக் கேட்டால், துன்பத்திற்கு அர்த்தம் உண்டு என்று சொல்வார். நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் எதையாவது வெற்றிகரமாக முடிக்கும் போது, அந்த வெற்றிக்குப் பின்னணியாக இருந்த முயற்சிகள், துன்பங்கள் அர்த்தமுள்ளவை என்பது புரியும். ஆனால், பல நேரங்களில் வாழ்வில் எவ்வளவு துன்பப்பட்டாலும், வெற்றிகள் வராது. துன்பம் ஒன்றையே மீண்டும் மீண்டும் சந்திக்க நேரும். அந்தத் துன்பங்களைப் புரிந்து கொள்ள துன்புறும் கடவுள் நமக்கு உதவியாக இருப்பார். துன்புறும் கடவுள் ஒருவர் இருப்பதாலேயே நம் துன்பங்களுக்கு நாம் அர்த்தம் தேடிக் கொள்ள முடிகிறது. இல்லையெனில் துன்பத்தில் நொறுங்கி, உருக்குலைந்து அனைவரும் நம்பிக்கை இழந்து அலைந்து கொண்டிருப்போம்.

வலியை மறக்க கொடுக்கப்பட்ட பழ இரசத்தை மறுத்த இயேசுவின் உறுதி துன்புறும் பல கோடி மக்களுக்கு உதவியாக இருந்துள்ளது என்று பெருமைப்படுகிறோம். அதே நேரம், வலியை மறக்க மனித குலம் மேற்கொள்ளும் பல முயற்சிகளை எண்ணி கவலையும் பட வேண்டியிருக்கிறது...

தினமும் மிகக் கடினமான உடல் உழைப்பை மேற்கொள்ளும் பலரை இந்த நேரத்தில் நான் நினைத்துப் பார்க்கிறேன். நாள் முழுவதும் உடலை வருத்தி, கசக்கிப் பிழியும் வேலைகளை மேற்கொள்பவர்கள் கோடிக்கணக்கான ஏழைகள்... மாலையானதும், கையில் அன்றையக் கூலி கிடைத்ததும் தங்கள் உடல் வலிகளை மறக்க அவர்களில் பலர் தேடிச் செல்வது சாராயம். சென்னை போன்ற பெரு நகரங்களில் சாக்கடைகளைச் சுத்தம் செய்பவர்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் அந்தப் பணியில் இறங்கும் முன் சாராயம் குடிப்பதையும் பார்த்திருப்பீர்கள். தாங்கள் இறங்கிப் பணி செய்யும் அந்தச் சூழலுக்கு மரத்துப் போகும்படி அவர்கள் அதைக் குடிக்க வேண்டியுள்ளது.


பணிச்சூழல் மரத்துப் போவதற்கும், பணி முடிந்து உடல் வலி தீர்வதற்கும் அவர்கள் பருகும் சாராயத்தின் பின் விளைவாக அவர்கள் உடல் நலத்தில் ஏற்படும் விபரீதங்கள், குடும்பங்களில் ஏற்படும் வேதனைகள் என்று பல பிரச்சனைகள் தொடரும். மேலோட்டமாகப் பார்க்கும் போது, இவர்களது இந்த சாராயத் தாகம் கண்டனத்திற்குரியதாய் நமக்குத் தோன்றும். கண்டனத்திற்கு பதில் கருணையுள்ள புரிந்து கொள்ளுதல் நமக்குத் தேவை.

கண்டனத்திற்குரியவர்கள் இவர்கள் அல்ல. இந்த ஏழைகளின் உடல் வேதனையை மூலதனமாக்கி, சாராயம் காய்ச்சும், அதுவும் தவறான வகையில், கீழ்த்தரமான சாராயம் காய்ச்சும் சாராய மன்னர்கள், மந்திரிகள் கண்டனத்திற்குரியவர்கள். இந்தத் தரக்குறைவான சாராயத்தைக் குடித்து உயிர் இழப்பவர்கள், பார்வை இழப்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டில் அதிகரித்து வருகிறதே ஒழிய குறைவதாகத் தெரியவில்லை. அதே போல், இந்த ஏழைகளின் குடும்ப வேதனைகளை மூலதனமாக்கி, வட்டிக்குக் கடன் கொடுத்து இந்த ஏழைகளை உயிரோடு விழுங்கும் சுறாமீன்களும் கண்டனத்திற்குரியவர்கள்.

தன் உடல் வலிகளை மறக்க அளிக்கப்பட்ட மதுவை குடிக்க மறுத்த இயேசு, குடிப் பழக்கத்தின், சாராய தாகத்தின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் ஏழைகளின் வாழ்விலும் குறுக்கிட்டு உடல் வேதனைகளைச் சமாளிக்க வேண்டிய மன வலிமையை, வேதனைகளிலிருந்து மீள்வதற்கான நல் வழிகளை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என செபிப்போம்.

யோவான் 19: 28-29
இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, "தாகமாய் இருக்கிறது" என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையப்புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள்.

முதல் முறை கொடுக்கப்பட்ட மதுவை மறுத்தார் இயேசு. இம்முறை "தாகமாய் இருக்கிறது" என்று விண்ணப்பித்தார். இறை மகனுக்கு முன் உண்டான தாகம் மனித குலம் அனுபவிக்கும் தாகங்களை, அவற்றை நாம் தீர்த்துக்கொள்ளும் வழிகளைச் சிந்திக்க ஒரு வாய்ப்பாக உள்ளது.



குளிர்ப் பானங்கள் பற்றிய தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்திருப்பீர்கள். இரு ஆண்டுகளுக்கு முன் 2008 ஆம் ஆண்டு வெளியான ஒரு தொலைக்காட்சி விளம்பரம் நினைவுக்கு வருகிறது. முப்பது நொடிகள் நடக்கும் இந்த விளம்பரத்தின் ஆரம்பத்தில் ஒருவர் தரையில் முகம் குப்புற படுத்து, ஊர்ந்த படியே ஒரு குளிர்சாதன பெட்டிக்கு அருகில் செல்வார். மிகவும் சிரமப்பட்டு அந்தக் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து, தட்டுத்தடுமாறி ஒரு குளிர்பானம் நிறைந்த பாட்டிலை எடுப்பார். குசனைபந ன் கதவை மூடுவார். திரை இருட்டாகும். அந்த குளிர் பானத்தின் பெயர் திரையில் வரும், அதைத் தொடர்ந்து, Obey your thirst... அதாவது "உன் தாகத்திற்கு கீழ்ப்படி" என்ற வார்த்தைகள் வரும்.

தாகங்களை வெல்வதற்கு, அப்படி வெல்ல முடியவில்லையெனில் தாகங்களைச் சமாளிப்பதற்குக் கற்றுக் கொள்வதே வாழக்கைக்குத் தேவையான, பயனுள்ள பாடங்கள். வியாபார உலகம், விளம்பர உலகம் கற்றுத் தரும் பாடங்கள் முற்றிலும் வேறுபட்டவை. "தாகத்திற்கு கீழ்ப்படியுங்கள்" என்று இந்த உலகம் சொல்லித் தருகிறது.

இந்த உலகம் சொல்லும் தாகம் வெறும் உடல் தாகம் அல்ல. மாறாக, நம்மில் தோன்றும் பல வகைத் தாகங்கள்... பொருளுக்கு, பதவிக்கு, செல்வத்திற்கு, பெருமைக்கு, அழகுக்கு, ஆசைகளுக்கு... என்று பல வகைகளிலும் நம்மில் எழும் தாகங்களுக்குக் கீழ்ப்படியச் சொல்கிறது இந்த உலகம். இந்தத் தாகங்களைத் தீர்க்க போட்டிகள் எழலாம். அந்தப் போட்டிகளில் பல கழுத்தறுக்கும் போட்டிகள் ஆகலாம். அந்தக் கழுத்தறுப்பில் சிந்தும் இரத்தத்தைக் குடித்தும் நம் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம் என்று பாடங்கள் சொல்லித்தரப் படுகின்றன இந்த உலகத்தில்.

இப்படிப்பட்ட தாகங்கள் நம்மை ஆளும்போது, நம்மை ஆட்டிப் படைக்கும்போது, அவைகளுக்குக் கீழ்ப்படியாமல், எதிர்த்து நிற்க வேண்டிய துணிவை நாம் பெற வேண்டும். அந்தத் துணிவு இறுதியில் நம்மைச் சிலுவையில் கொண்டு போய் நிறுத்தினாலும், அந்தச் சிலுவையிலும் நிற்கக் கூடிய துணிவை கல்வாரியில் சிலுவையில் தாகமாய் இருந்த வீரத் திருமகன் இயேசு நமக்குத் தர வேண்டும் என்று செபிப்போம்.

அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகள் சிறி லங்கா இராணவத்தால் கொலை செய்யப்பட்டு 25 ஆண்டுகள். வங்காலையில் நினைவுத் திருப்பலியும் அஞ்சலிக் கூட்டமும்

அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகள் சிறி லங்கா இராணவத்தால் கொலை செய்யப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் இலங்கை அரசு கொலைகாரர்களை கண்டுபிடிக்க முயலவில்லை. விரும்பவும் இல்லை.


இளவாலையை பிறப்பிடமாக கொண்ட பஸ்ரியன் அடிகள் 1975ஆம்ஆண்டு அருட்பணியாளனாக திருநிலைப்படுத்தப்பட்டார். மானிப்பாய முருங்கன் ஆகிய பங்குகளிலும் மடுத்திருத்தலத்திலும் சிறப்பாக பணியாற்றினார்.



1985 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் நாள் வங்காலைப்பங்கு மக்கள் உட்பட பஸ்ரியன் அடிகள் மிகவும் கோரமான முறையில் இலங்கை இராணவத்தால் கொலை செய்யப்பட்டார்கள். அவரது உடலைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. இன்னும் மேலாக பஸ்ரியன் அடிகள் இந்தியாவுக்கு தப்பி ஓடி விட்டார் என்ற கட்டுக்கதையும் அந்நேரத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி பரப்பினார். திருத்தந்தை வரை இப் பொய் பரப்புரை செய்யப்பட்டது. இலங்கை கத்தோலிக்க தலைமைப் பீடமும் இதற்க்கு துணை நின்றது. இக் கொலையை செய்தவர்களை இலங்கை அரசு இலகுவில் கண்டு பிடித்திருக்க முடியும். ஏனென்றால் இலங்கை இராணுவமே இதைச் செய்தது என்பது வங்காலை மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவருக்குமே தெரியும். 25 ஆண்டுகள் ஆகியும் நீதி கிடைக்கவில்லை. இவ்வாறு காணமல் போய் கொலை செய்யப்பட்ட அருட்பணியாளர்கள் பலர். மட்டக்கிளப்பு திருமலை மறைமாவட்டத்தை சேர்ந்த அருள்பணி சந்திரா பெர்ணாண்டோ மில்லர் அடிகள் அண்மையில் ஜிம் பிறவுண் அடிகள் என்று பட்டியல் நீடிக்கின்றது. இன்னும் இன்றும் காணமல் போன தூய பத்திரிசியார் கல்லூரி முன்நாள் அதிபர் அருட பணி பிரான்சி யோசப் பற்றி பேச்சே இல்லை.



இலங்கைத் கத்தோலிக்கத் திருச்சபை ஒரு அறிக்கையோ ஒரு விசாரணை மேற்கொள்ள வேண்டுமொன்றோ வேண்டுகோள் தானும் விடுக்கவில்லை. ஐரோப்பிய யூனியன் இலங்கையிடம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படாத இடத்தில் ஜி எஸ் பி சலுகை வழங்கப்படாது என்று கூறும் போது மட்டும் கொழும்புப் பேராயர் மகிந்த அரசுக்கு சார்பாக ஐரோப்பிய நாடுகளிடம் எஸ் பி சலுகை வழங்கப்பட வேண்டுமென்று பல நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். பயன் ஏதுவும் இன்னும் கிட்டவில்லை.



மன்னார் ஆயர் தமது மறையுரையில் பஸ்ரியன் அடிகளின் ஆழமான அர்ப்பணிப்பையும் தீமைக்கும் அநீதிக்கும் எதிராக போராட்டத்தையும் ஏழை மக்களுக்கான அவர் சேவையும் விபராமாக எடுத்துரைத்தார். 25 ஆண்டுகளுக்கு முன்பு பஸ்ரியன் அடிகள் மிகவும் கோரமான முறையில் இலங்கை இராணவத்தால் கொலை செய்யப்பட்டபோது மிகவும் அருகில் இருந்து, "ஐயோ அம்மா" என்று குளறியதை கேட்டு தெய்வாதீனமாக தப்பி பல ஆண்டுகள் மௌனத்தின் பின் தனது கொடுரமான அனுபவத்தை லிவின்தா குருஸ் அங்கே குழுமியிருந்த மக்களுடன் பகிர்ந்து கொண்ட போது அனைவரின் கண்களும் குளமாகின. பஸ்ரியன் அடிகள் இலங்கை இராணவத்தால் கொலை செய்யப்பட்டதற்கு காரணம் சில நாட்களுக்கு முன்னர் தென்னிந்திய திருச்சபையின் பணியாளன் ஜெயராஜசிங்கம் இதே இராணவத்தால் கொலை செய்யப்பட்டபோது பல புகைப்படங்களை எடுத்திருந்தார். மனித உரிமை மீறல்களை, கொலைகளை வெளியுலகுக்கு கொண்டு வந்திருப்பார் என்ற பீதியே இக் கொலைக்கு காராணமாக இருக்கலாம்.

மனித உரிமைகள் மட்டில் ஆர்வமும் பஸ்ரியன் அடிகளின் ஆழமான அன்பும் கொண்டவரும் தற்போது அதே பங்கை நிர்வகிப்பவருமாக ஜெயபாலன் குருஸ் .இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் 20 வருடங்களுக்கு பின்னர் திருப்பலி - சிறி லங்கா இராணுவம் அனுமதி

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த காரணத்தினால் அவ்வூர் மக்கள் அக்கிராமத்தில் இருந்து வெயியேற்றப்பட்டார்கள். 20 வருடங்களாக மக்கள் எவரும் அங்கு செல்ல முடியவில்லை. புத்தைகளும் செடிகளும் நிறைந்திருந்த அந்த ஆலயத்தை 1000க்கும் அதிகமான மக்கள் துப்பரவு செய்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பாழடைந்த இவ்வாலயத்தில் திருப்பலி நிறைவேற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை இவ்வூர் மக்கள் பெரும்பேறாக கருதுகின்றார்கள். ஏற்கனவே உயர் பாதுகாப்பு





வலயத்தை நீக்கும் படி யாழ்ப்பாண ஆயர் இலங்கை அரசு தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். உயர் பாதுகாப்பு வலயத்தில் 12 ஆலயங்கள் உள்ளன. சொந்த இடங்களுக்கு செல்ல 20 ஆண்டுகள் போதாதா எனும் கேள்வி இம்மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. மயிலிட்டியை சேர்ந்த பேதுருப்பிள்ளை தேவநாயகம் எமது மக்களுக்கு கொடுப்பதற்கு எம்மிடம் ஒன்றுமேயில்லை என்று தனது சோகத்தை பகிர்ந்து கொண்டார்.

இலங்கையில் அமைதியைக் கட்டி எழுப்புவதில் தங்களுக்கு இருக்கும் பெரும் பங்கை யாழ்ப்பாணப் பெண்கள் வலியுறுத்தியுள்ளனர்

- வத்திக்கான் வானொலி

இலங்கையில் அமைதியான சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் தங்களுக்கு இருக்கும் பெரும் பங்கை வலியுறுத்தி வருகின்றனர் யாழ்ப்பாணப் பெண்கள். தாய்மார்கள், மனைவிகள், சகோதரிகள் என்ற வகையில் சமுதாயத்தில் தங்களின் பொறுப்பு என்ன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் பல பெண்கள் அண்மையில் ஊர்வலம் மேற்கொண்டனர்.

மார்ச் 8ம் தேதி நூறாவது சர்வதேச பெண்கள் தினம் அனுசரிக்கப்பட்டிருந்தாலும், அத்தினத்தை முன்னிட்டு இவ்வாரத்தில் ஊர்வலம் மேற்கொண்ட சுமார் 250 இந்து மற்றும் கத்தோலிக்கப் பெண்கள், அரசியலில் பெண்களின் பங்கையும் வலியுறுத்தினர். இலங்கையில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காட்டுக்கு அதிகமாகவும் வாக்காளர்களில் 56 விழுக்காடகவும் இருக்கும் பெண்களன் பங்கு அரசியலில் 5 விழுக்காடே எனவும் அவர்கள் கூறினர்.



கடந்த மே மாதம் முடிவடைந்த இலங்கையின் 26 வருட உள்நாட்டுச் சண்டையில் பெருமளவாக உயிரிழந்தது ஆண்களேயானாலும், குடும்ப உறுப்பினர்களின் இழப்பால் தற்சமயம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுட்காப்புறுதிகளும் சேமிப்புத்திட்டங்களும்

LIFE INSURANCE & RESP

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்
- நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

	Age 30 Male	Age 30 Female	Age 40 Male	Age 40 Female	Age 50 Male	Age 50 Female
Term 10 (R & C) $100,000	$11.25	$9.00	$13.77	$12.33	$24.48	$19.77
Whole Life $100,000	$38.17	$33.63	$57.16	$47.36	$106.64	$81.75

Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்
நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

•

Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

Term Insurance

குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

Canada Learning Bond upto $500.00
Government Grant upto $40%
Industrial Alliance Education Bonus 15%

- digi Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009

சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

416.918.9771

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x:407



Assumption Life | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life | RBC Financial Group | LiLand INSURANCE INC.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

உருளும் உலகில் கத்தோலிக்க செய்திகள்

மரண தண்டனைகளின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் குறைந்துள்ளது.
-கத்தோலிக்க San Egidio அமைப்பு தெரிவிக்கிறது

மரண தண்டனைக்கு எதிரான விழிப்புணர்வு அதிகரித்து, மரண தண்டனைகளின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் குறைந்துள்ளதைக் காண முடிகிறது என மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார் கத்தோலிக்க San Egidio அமைப்பின் Mario Marazziti.

உலகில் 56 நாடுகளே மரண தண்டனையைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன, 141 நாடுகளில் அண்மைக் காலங்களில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்ற San Egidio அமைப்பின் அதிகாரப் பூர்வ பேச்சாளர், 2008ஆம் ஆண்டில் உலகில் 2,390 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற Amnesty International மனித உரிமைகள் நிறுவனத்தின் கூற்றையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

1970ம் ஆண்டுகளில் 23 நாடுகளே மரண தண்டனை விதிப்பதிலிருந்து விலகியிருக்க, தற்போதோ 93 நாடுகளில் மரண தண்டனை அதிகாரப் பூர்வமாக நீக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார் அவர்.2008ஆம் ஆண்டில் சைனாவிலேயே அதிக எண்ணிக்கையில் மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சைனாவில் 1,718 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இரண்டாவதாக வரும் ஈரானிலோ அது 346 ஆகும்.

கர்தினால் John Henry Newman முத்திபேறு பெற்றவராக உயர்த்தும் திருச்சடங்கை திருத்தந்தை முன்னின்று நடத்துவார்

வரும் செப்டம்பர் மாதம் இங்கிலாந்தில் நான்கு நாள் திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட், அங்கு கர்தினால் John Henry NewmanI முத்திபேறு பெற்றவராக உயர்த்தும் திருச்சடங்கை முன்னின்று நடத்துவார் என்று இங்கிலாந்தின் கத்தோலிக்கத் தலைவர்கள் கூறியுள்ளனர்.



கலாச்சாரம், கவிதை மற்றும் அருட்பணி என்று பல கோணங்களிலும் சிறந்தவராய் விளங்கிய கர்தினால் Newman கடந்த 200 ஆண்டுகளாக ஆங்கிலேய வரலாற்றில் தனியொரு இடம் பிடித்துள்ளார் என்றும், அவர் எழுதிய கருத்துக்கள் பல திருத்தந்தை 16ம் பெனடிக்ட்டின் சிந்தனைகளைத் தூண்டியுள்ளதெனவும் இங்கிலாந்து ஆயர் பேரவையின் தலைவர் பேராயர் Vincent Nichols செய்தியாளர்களிடம் கூறினார்.

முத்திபேறுபெற்றவர் எனும் தகுதிக்கு ஒருவரை உயர்த்துவதை தலத்திருச்சபையின் கர்தினால்கள் நடத்த வேண்டும் என்று திருத்தந்தை ஏற்படுத்திய வழிமுறைக்கு ஒரு விதிவிலக்காக அவரே இந்தத் திருச்சடங்கை இங்கிலாந்தில் மேற்கொள்வது, கர்தினால் Newman பேரில் அவருக்குள்ள ஆழ்ந்த மதிப்பைக் காட்டுகிறதென பேராயர் ேைஉாழடள மேலும் கூறினார்.

இந்த திருச்சடங்கு கர்தினால் Newman வாழ்ந்த Birmingham உயர் மறைமாவட்டத்தில் நடைபெறும் என்று செய்திக்குறிப்பொன்று கூறுகிறது. 1801ஆம் ஆண்டு Anglican சபையைச் சார்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்த கர்தினால் Newman> தனது 24வது வயதில் Anglican குருவாகி, பின்னர் தனது 44வது வயதில் கத்தோலிக்கத் திருச்சபையில் இணைந்தார் என்பதும், அங்கு அவரது 78ஆம் வயதில் கர்தினாலாக உயர்த்தப்பட்டு, 89ஆம் வயதில் இறையடி சேர்ந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

திருத்தந்தை செப்டம்பர் மாதம் இங்கிலாந்துக்கு வருவார் என்று இங்கிலாந்து அரசி அதிகாரப் பூர்வமாக அறிவித்தார்

திருத்தந்தை வருகிற செப்டம்பர் மாதம் இங்கிலாந்துக்கு வருவார் என்று இச்செவ்வாயன்று இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத் அதிகாரப் பூர்வமாக அறிவித்தார்.

இங்கிலாந்தின் ஐக்கிய அரசும், திருப்பீடமும் இணைந்து செயல்படும் போது, உலகத்தில் விசுவாசத்தின் அடிப்படையில் உறுதி வாய்ந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று இங்கிலாந்தின் அரசு அதிகாரிகளும் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆயர் பேரவையினரும் இணைந்து செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

திருத்தந்தையின் இந்த பயணம் வரலாற்று சிறப்பு மிக்கது, ஏனெனில் திருத்தந்தை ஒருவர் அரசு சார்பில் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்றும் மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் 1982ல் அங்கு மேற்கொண்ட பயணம் மீட்புப் பணி சார்ந்த பயணமே என்றும் அரசு தரப்பில் வெளியான ஒரு செய்திக் குறிப்பு கூறுகிறது.

திருத்தந்தையின் வருகை கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல, இங்கிலாந்தின் அனைத்து மக்களுக்கும் மகிழ்வு தரும் ஒரு நிகழ்வு என்றும் இங்கிலாந்தும் திருப்பீடமும் உலகத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்கு, முக்கியமாக வறுமை, சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு பிரச்சனைகளுக்கு இணைந்து தீர்வுகள் காண திருத்தந்தையின் வருகை வழி வகுக்கும் என்றும் ஸ்காட்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் துஅை ஆரசிால கூறினார்.

அரசுத்தரப்பில் இந்த வரலாற்று சிறப்பு மிக்க அழைப்பை விடுத்த அரசி எலிசபெத்துக்கும், இங்கிலாந்து அரசுக்கும் ஆயர் பேரவையின் சார்பில் தன் மகிழ்வையும் நன்றியையும் தெரிவித்தார் ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் Vincent Nichols.

புனித Patrick நாடு விட்டு நாடு புலம் பெயர்ந்தவர் - அயர்லாந்து ஆயர் Seamus Hegarty

புனித Patrick நாடு விட்டு நாடு புலம் பெயர்ந்தவர் என்பதால், அயர்லாந்து மக்கள் தங்கள் நாட்டை நாடி வரும் பிறநாட்டவர்களை, முக்கியமாக புலம் பெயர்ந்தோரை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளனர் என்று அயர்லாந்து ஆயர் பேரவையின் பிரதிநிதி கூறியுள்ளார்.

மார்ச் 17ஆம் நாள் கொண்டாடப்படும் புனித Patrick திருநாளைத் தேசிய திருநாளாக கொண்டாடும் வேளையில், அயர்லாந்து உலக மக்கள் அனைவரையும் வரவேற்று வாழவைக்கும் ஒரு நாடாக மாற வேண்டுமென அயர்லாந்து ஆயர் பேரவையின் புலம் பெயர்ந்தோர் பணிக்குழுவின் தலைவர் ஆயர் Seamus Hegarty கூறினார்.



அயர்லாந்துக்கு வரும் பிறநாட்டினரைப் பற்றி எண்ணும் அதே வேளையில், அயர்லாந்திலிருந்து பிற நாடுகளுக்கு, சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்றுள்ள தங்கள் நாட்டினரையும் எண்ணிப் பார்க்க வேண்டும் எனவும், அவர்களும் விரைவில் தாங்கள் குடிபெயர்ந்து சென்றுள்ள நாடுகளில் அதிகாரப் பூரவமாக வாழும் வழிகள் செய்யப்பட வேண்டுமெனவும் ஆயர் ர்நபயசவல கூறினார்.ஒவ்வொரு நாட்டிலும் அகதிகளாக, புலம் பெயர்ந்தோராக புகலிடம் தேடும் மக்களை வரவேற்று அவர்களுடன் தங்கள் ஒன்றிப்பை காட்டுவதே கிறிஸ்தவர்களின் கடமை என்று மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் கூறியதையும் எடுத்துக்காட்டினார் ஆயர் Hegarty.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், கனடாவிலும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், கனடாவிலும் கத்தோலிக்க திருச்சபை, மற்ற கிறிஸ்தவ சபைகள் ஆகியவற்றில் உள்ளவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதென 2010ஆம் ஆண்டிற்கான கிறிஸ்தவ சபைக்களுக்கான அறிக்கை ஒன்று கூறுகிறது.

6 கோடியே 80 லட்சம் கத்தொலிக்கர்களைக் கொண்ட இந்நாடுகளில் 2009ஆம் ஆண்டு வெளியான தகவலின்படி கத்தோலிக்கரின் எண்ணிக்கை சற்றே குறைந்திருந்ததென்றும் இவ்வாண்டு வெளியாகியுள்ள "Yearbook of American & Canadian Churches" அறிக்கையில் அந்த எண்ணிக்கை 1.49 விழுக்காடு அதிகரித்து உள்ளதென்றும் கூறப்பட்டுள்ளது.மதம் சாராக் கொள்கைகள் அதிகம் பரவி வரும் வட அமெரிக்க நாடுகளில் மதம் இன்னும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு அம்சமாக உள்ளதென செய்திக்குறிப்பொன்று கூறுகிறது.

துன்புறும் கிறிஸ்தவர்களுக்கென ஒரு வலைத்தளம்

சித்ரவதைப்படுத்தப்படும் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலைகளை வெளி உலகுக்கு வெளிப்படுத்த உதவும் விதமாக கணனி வலைத்தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது Aid to the Church in Need என்ற அமைப்பு.

'Where God Weeps' அதாவது கடவுள் கண்ணீர் விடும் இடம் என்ற தலைப்பில் இத்தளத்தைத் துவக்கியுள்ள இக்கத்தோலிக்க அமைப்பு, கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் பகுதிகளில் பணிபுரிவோரின் கருத்துக்கள் இதில் இடம்பெறும் எனவும் அறிவித்துள்ளது.

துன்புறுத்தப்படும் மக்களோடு எங்கனம் பணியாற்றுவது, அவர்களுக்கு எவ்வழிகளில் உதவுவது என்பது குறித்தும் மக்கள் தங்கள் கருத்துக்களை இவ்வலைத்தளம் மூலம் வழங்கலாம் எனக்கூறும் இவ்வமைப்பு, உலகின் இன்றைய 680 கோடி மக்களுள் 70 விழுக்காட்டினர் பெரும் மதக்கட்டுப்பாடுகளையுடைய நாடுகளில் வாழ்வதாகவும், மதக்காரணங்களுக்காக அதிக அளவில் சித்திரவதைகளை அனுபவிப்பது கிறிஸ்தவர்களே எனவும் தெரிவிக்கிறது.

ஹெயிட்டியின் பல்வேறு தேவைகளுக்கு நிதி உதவி வழங்க வத்திக்கானின் தபால் தலை

வத்திக்கானின் தபால் தலை மற்றும் நாணய வெளியீட்டு அலுவலகம் வெளியிடும் அடுத்த தபால் தலைகளின் விற்பனையிலிருந்து ஹெயிட்டியின் பல்வேறு தேவைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும் என அவ்வலுவலகம் அறிவித்துள்ளது. ஆழவெழசநடடயவின் அருள் நிறை மரியன்னை ஆலயத்தின் 1500வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இத்தபால்தலை, ஏற்கனவே



8ஆம் பக்கம் பார்க்கவும்

7ஆம் பக்கத் தொடர்ச்சி

திட்டமிட்டபடி வெளியிடப்படும் என்றும், பிரசுரமாகும் அனைத்து தபால் தலைகளும் விற்கப்பட்டால், அந்த விற்பனையிலிருந்து கிடைக்கும் ஏறத்தாழ இரண்டு லட்சம் டாலருக்கும் அதிகமான தொகை ஹெயிட்டியின் நிவாரண உதவிக்கென வழங்கப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. திருத்தந்தையர் இரண்டாம் ஜான் பாலும், 16ஆம் பெனெடிக்ட்டும் திருத்தந்தையர்களாகப் பொறுப்பேற்றதும் வத்திக்கானிலிருந்து 40மைல் தூரத்தில் அமைந்துள்ள மரியன்னையின் இக்கோவிலைச் சென்று தரிசித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

வறுமையில் வாடும் நாடோடி இனத்தவரின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்படுவதற்கு திருப்பீட உயர் அதிகாரி அழைப்பு

வறுமையில் வாடும் நாடோடி இனத்தவரின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்படுவதற்கு உழைப்பதற்கான கடமையை திருச்சபை கொண்டுள்ளது என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

வத்திக்கானில் நாடோடிகளுக்கான திருச்சபையின் மேய்ப்புப்பணி குறித்த மூன்று நாள் கருத்தரங்கு பற்றிப் பேசிய பேராயர் அகுஸ்தீனோ மர்க்கெத்தோ இவ்வாறு கூறினார்.

ஐரோப்பாவில் ஒரு கோடியே இருபது இலட்சம் முதல் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் வரையிலான நாடோடிகள் வாழ்கின்றனர் என்றும், குடிநீர், உணவு, குடியிருப்பு, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி இருக்கின்றனர் என்று, திருப்பீட குடியேற்றதாரர் அவைச் செயலரான பேராயர் மர்க்கெத்தோ கூறினார். வறுமை மற்றும் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நிலையை அகற்றுதல் எனும் தலைப்பில் ஐரோப்பியர்கள் இவ்வாண்டை கடைபிடித்து வருவது பற்றியும் குறிப்பிட்ட பேராயர், உரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் திருச்சபையின் மேய்ப்புப்பணிகளை ஊக்குவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிள்ளைகள் வளர்வதற்கு ஒன்றிணைந்த குடும்பங்கள் அவசியம் - கர்தினால் அந்தோனெல்லி

பிள்ளைகள் வளர்வதற்கு ஒன்றிணைந்த குடும்பங்கள் இன்றியமையாதவை என்று திருப்பீட குடும்ப அவைத் தலைவர் கர்தினால் என்னி அந்தோனெல்லி கூறினார்.

"குடும்பமும் தொழிலும்: சமூகத்தின் முக்கிய கூறுகள்" என்ற தலைப்பில் இத்தாலிய கத்தோலிக்கத் தொழில் அதிபர்களுக்கு உரையாற்றிய கர்தினால் அந்தோனெல்லி, குழந்தைகளின் எதிர்காலம் குடும்பங்கள் அமைவதைப் பொறுத்தே இருக்கின்றது என்றும் கூறினார்.

மேற்கத்திய உலகின் பல பகுதிகளில் குடும்பங்களின் நிலை அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில், சேர்ந்து வாழாத பெற்றோரின் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து வெளிவந்த முடிவுகள் பற்றி சுட்டிக் காட்டினார்.மேற்கத்திய உலகின் பல பகுதிகளில் வீடற்ற மக்களில் 90 விழுக்காட்டினரும், தற்கொலை செய்யும் இளையோரில் 72 விழுக்காட்டினரும், கற்பழிப்போரில் 60 விழுக்காட்டினரும், சிறையிலுள்ள இளையோருள் 85 விழுக்காட்டினரும் தந்தையின்றி வளர்ந்தவர்கள் என்ற அந்த ஆய்வின் முடிவையும் குறிப்பிட்டுப் பேசினார் கர்தினால் என்னி அந்தோனெல்லி

மனிதன் கடவுள் பேசுவதை உற்றுக் கேட்க வேண்டும் – திருத்தந்தை

மனிதன் தன்னிலே நிறைவானவன் அல்ல, மாறாக அவனுக்கு உறவுகள் தேவைப்படுகின்றன மற்றும் அவன் உறவுகளில் வாழ்கிறவன் என்று திருத்தந்தை பெனடிக்ட் கூறினார்.

தவக்கால ஆண்டு தியானத்தை முடித்து தியான மறையுரைகள் வழங்கிய சலேசிய சபை அருள்தந்தை என்ரிக்கோ தல் கொவோலோவுக்கு அனைவர் சார்பாக நன்றி தெரிவித்த திருத்தந்தை, மனிதனுக்கு உற்றுக் கேட்டல் அவசியம், அவன் பிறருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளுக்கும் அவன் உற்றுக் கேட் வேண்டும் என்று கூறினார். அப்பொழுதுதான் மனிதன் தன்னோடும் பிறரோடும் இணங்கி வாழ முடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

அன்னைமரியா எவ்வாறு இறைவார்த்தையை உற்றுக் கேட்டாள் என்பதை விளக்கிய திருத்தந்தை, குருத்துவத்தின் எடுத்துக்காட்டுகளாயத் திகழ்ந்த ஐந்து முக்கிய திருச்சபைத் தந்தையர் பற்றி இத்தியானத்தில் அதிகம் கேட்க முடிந்தது என்றார். இச்சர்வதேச குருக்கள் ஆண்டில் இத்தியானம் குருத்துவ அழைத்தலை மையமாகக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.மேலும், இத்தியானம் திருத்தந்தைக்கு ஆழமான ஆன்மீக அனுபவமாக இருந்தது என்று திருப்பீடப் பேச்சாளர் பெடரிக்கோ லொம்பார்தி சே.ச. கூறினார்.

நற்செய்தி அறிவிப்புக்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் ஐக்கியம் அவசியம் - திருத்தந்தை

கிறிஸ்தவ சபைகளிடையேயான முழுமையான ஒன்றிப்பு இன்னும் கிட்டவில்லையெனினும், கிறிஸ்தவர்கள் அனைவரும் பொதுவான சாட்சிய வாழ்வுக்கான முயற்சிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கேட்டுக் கொண்டார்.

புனித பவுல் மனம்மாறிய விழாவான இத்திங்கள் மாலை உரோம் புனித பவுல் பசிலிக்காவில் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை நிறைவு செய்யும் திருவழிபாட்டை நிகழ்த்திய போது இவ்வாறு உலகக் கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நன்மைத்தனம் மற்றும் அமைதியை ஊக்குவித்தல், மனிதனை மையப்படுத்தும் செயல்பாடுகள், பசி, எழுத்தறிவின்மை, வளங்கள் சமமாகப் பங்கிடப்படாமை, வறுமை போன்ற இக்காலத்திய துன்பங்களை அகற்றுதல் போன்றவற்றில் கிறிஸ்தவர்கள் அனைவரும் பொதுவில் சாட்சியம் பகருமாறும் திருத்தந்தை வலியுறுத்தினர்.

உலகப்போக்கு, பாராமுகம், தான் என்ற கோட்பாடு, வாழ்வின் தொடக்கமுதல் இறுதிவரை அதைக்காப்பதில் ஏற்படும் அறநெறிப் பிரச்சனைகள், அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத்தின் வரையறைகள், பிற மதங்களுடன் உரையாடல் போன்றவை முன்வைக்கும் சவால்கள் பற்றியும் அவர் சுட்டிக் காட்டினார்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் முழுமையான ஒன்றிப்பு ஏற்படுவதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவ சபையும் முயற்சிக்குமாறும் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை.

சிலுவையின் பாதையில் தமிழர் எம் சிலுவைப் பாதை

- கரவையூர் செல்வம்

முன்னுரையாக என்னுரை...

சிலுவையில் அறையப்பட வேண்டுமென்ற தீர்ப்பின் பின்னர் இயேசு தனது சிலுவையைத் தானே சுமந்துகொண்டு கல்வாரி நோக்கிச் செல்லும் அந்தப் பாதையில் சில நிகழ்வுகள் நடந்தன. இவை நற்செய்தி ஏடுகளில் (புதிய ஏற்பாட்டின் முதற் பகுதி) எழுதப்பட்டுள்ளன.

அதேவேளை நற்செய்திஏடுகளில் இடம்பெறாத நிகழ்வுகள் சில பாரம்பரியமாக தலைமுறை தலைமுறையாக எடுத்துச் சொல்லப்பட்டும் வருகின்றன. இந்த நிகழ்வுகளும் சிலுவைப் பாதையில் "இணைக்க பட்டுள்ளன. இவை எல்லாம் வரலாற்றில் நடைபெற்றுள்ளனவா? இல்லையா? என்ற வினாக்களை வரலாற்று ஆசிரியர்களிடமும் விவிலிய ஆசிரியர்களிடமும் விட்டுவிடுவோம். அது இச்சிறு நூலின் நோக்கத்திற்கு புறம்பானது.

நற்செய்தி ஏடுகளில் எடுத்துச் சொல்லப்பட்ட நிகழ்வுகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன என்று சொல்லத் துணியலாம் ஆகவேஇ அவற்றையே மையமாகக் கொண்டு அந்த நிகழ்வுகளை எமது சிந்தனைக்காக முதலில் எடுத்துக்கொள்வோம்.

வரலாற்றை மாற்றிய நிகழ்வு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த உண்மை நிகழ்வு ஒன்றைப் பற்றி பல்வேறு மொழிகளில் எழுதியுள்ளார்கள். இயேசுவின் இந்தக் கதையை பலர் திரைப்படங்களாக்கியுள்ளார்கள்: நாடகங்களாக நடித்து மேடையேற்றியுள்ளார்கள்: நாட்டிய நாடகங்களாக உருவாக்கி உள்ளார்கள். கவிதை நாடகங்களாக அரங்கேற்றி உள்ளார்கள். ஒவ்வொருவரும் தமது கற்பனைத் திறனையும்இ ஆக்க சக்தியையும் பயன்படுத்தி என்றோ நடந்தேறிய ஒரு வரலாற்று நிகழ்விற்கு அவ்வப்பொழுது காலத்திற்கேற்ப உயிர் கொடுத்து உள்ளார்கள அப்படிப்பட்ட ஒருவரலாற்று நிகழ்வு இது. உலக வரலாற்றையே மாற்றி அமைத்த நிகழ்வு இது. அதாவது, (கி.மு, கி.பி) என்று உலகவரலாற்றையே பிரித்து வகுத்த கதை இது.

கிறிஸ்தவத்தில் அதுவும் குறிப்பாக கத்தோலிக்கத்தில் சிலுவைப் பாதை ஒரு பக்திப் "பயிற்சியாக" (a devotion) வளர்ந்து விட்டது. அதுவும் தவக்காலமென்றதும் இந்த பக்தி புத்துயிர் பெற்றுவிடும் (தவக்காலம்: உயிர்ப்பு விழாவிற்கு –(நுயளவநச)இ முன்னரும் விபூதித் திருநாளின் பின்னரும் வரும் காலத்தையே கத்தோலிக்கர் தவக்காலம் எனக் குறிப்பிடுகின்றார்கள்).

தவக்காலத்தில் சிலர் நாள்தோறும் பலர் தவக்காலத்து வெள்ளி தோறும் இப்பக்தியில் ஈடுபடுவர். கல்வாரிக் குன்றில் இயேசு மரித்துள்ள நாளில் பெரிய வெள்ளி (Good Friday) என்று பல பங்குகளில் "பெரிய சிலுவைப்பாதை" நடத்துவதும் உண்டு.

இயேசுவின் பாடுகளை துன்பத்தை வேதனையையிட்டு நாம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அன்று நடந்தேறிய நிகழ்வுகளுக்காக இன்று நாங்கள் அழவேண்டியதில்லை.அவை நடந்து முடிந்துஇ இயேசு அற்றில் இருந்து நம்மை விடுதலையாக்கி புத்துயிர் பெற்றுஇ இன்னமும் இன்றும் வாழ்ந்து வருகின்றார். இன்றும் வாழ்வார். இதுஇ கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. ஆகவேஇ இயேசுவின் துன்பங்களை இட்டு நாம் இன்று வருந்த வேண்டியதில்லை. இதுதான் யதார்த்தம் என்றால் ஏன் இந்தப் பக்தி?

ஏனைய பக்திகளில் இருந்து சிலுவைப்பாதை பக்த்தி வேறுபட்டது இப்பக்தியில் பொதுவாக நாம் எமக்கென்று புறத் தேவைகளுக்காக செபிப்பதில்லை.

இரண்டாவதாக, அன்று இயேசுவின் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் நடந்தேறிய நிகழ்வுகளில் நான் என்னைப் பார்க்கின்றேன்: எனது மக்களைப் பார்க்கின்றேன்: எனது இனத்தைப் பார்க்கின்றேன்: உலகில் துன்புறும், துன்புறுத்தப்படும் அனைத்து மக்களையும் பார்க்கின்றேன்: இந்தப் பார்வையில் ஒரு சவாலைக் கேட்கின்றேன்: ஓர் அழைப்பைக் கேட்கின்றேன். அந்த சவாலையும்இ அழைப்பையும் நீங்களும் கேட்க வேண்டும் என்று விரும்பினேன். அதனால் உருவானதே இச்சிறு நூல்.

சிலுவைப்பாதைப் பக்தி, துன்பத்தை மகிமைப் படுத்துவதற்கல்ல. அன்றேல், எமது நோவுகளில் மூழ்குவதற்கல்ல. "ஐயோ! நான் பாவம்!" என்று என்னிலேயே நான் பரிதாபப்படுவதற்குமல்லஇ அந்தப் பரிதாபத்தில் (self- pity) ஓர் இனமறியா ஆறுதல் தேடுவதற்குமல்ல. இப்பக்தியை ஒரு மதுவாக்கி இயேசுவின் பாடுகளில் நாம் ஒழியவும் இல்லை.

துன்பத்தை நாம் வழிபடவில்லை. கஸ்டங் களையும் கவலை களையும் சித்திர வதைகளையும் சிற்பங்களாகச் செதுக்கி அவற்றை நாம் வழிபடவில்லை. துன்பங் களையும், நோவு களையும் பக்தியாக மாற்றி எங்கள் துன்பங்களில் இருந்து நாம் ஓடவில்லை, ஒழியவில்லை.

துன்பத்தை விரும்புபவர்கள்இ கவலைகளை மகிமைப் படுத்துபவர்கள், வேதனையில் இன்பங்காண்பவர்கள்இ தம்மில் தாமே இரக்கப் படுபவர்கள் (self –pity) தம்மைத் தாமே பலிக்கடாக்களாக்கி மற்றவர்களின் அனுதாபத்தை தம்மில் ஈர்ப்பவர்கள், மன நோயாளிகள்.

சிலுவைப் பாதை, உள நோயாளிகளை உருவாக்குவதற்கல்ல. இவற்றை இங்கு நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

காரணம்: சிலுவைப் பாதைப்பக்தியை அங்ஙனம் மாற்றுபவர்கள் உண்டு. சிலுவைகளைக் காட்டி துன்பங்களை பொறுக்கச் சொல்பவர்கள் இருக்கிறார்கள். இன்று வேதனைப்படுபவர்கள் மறுவுலகில் மகிமைப்படுத்தப் படுவார்கள் என்று போதிப்பவர்கள் இன்னும் உள்ளார்கள். அது கிறித்தவம் அல்ல. இயேசு துன்பத்தை விரும்பியவர் அல்ல. கெத்சமனித் தோட்டத்தில் அவர் செபித்த செபத்தில் இருந்து இதை உறுதியாக்கிக் கொள்ளலாம். சிலுவையின் பாதையில் முதல் கட்டத்தில் இதைத் தெளிவாக்க முனைந்துள்ளேன்.

ஒரு பக்திக்கப்பால் சென்று சிந்திக்கின்றேன். உங்களையும் சிந்திக்க அழைக்கின்றேன். அச்சிந்தனையில் ஒரு சவால் உண்டு. அந்தச் சவாலைச் சந்திக்க உங்களை அழைக்கின்றேன். அச்சவாலைச் சந்திக்கும் பொழுது அங்கு ஓர் அழைப்பைக் கேட்பீர்கள். அந்த அழைப்பிற்குப் பதில் இறுப்பதுமஇ விடுவதுமஇ மறுப்பதுமஇ உங்கள் பொறுப்பு.

இச் சிறு நூலை எங்ஙனம் பயன்படுத்துவது? இயேசுவின் இறுதிக்கால நிகழ்வுகளை நான்கு நற்செய்திகளிலும் இருந்து எடுத்துஇ அவற்றைக் கட்டங்களாக வகுத்துள்ளேன். பெரும்பான்மையும் காலங்காலமாக அவை வகுத்துத் தரப்பட்டுள்ளன. ஏனோஇ இயேசுவின் சிலுவைப்பாதையை கெத்சேமனித் தோட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்போல் எனக்குத் தோன்றியது.

பிரியாவிடைப் பந்தி அவர்களோடு இயேசுவின் இரண்டாவது பகுதி வாழ்வு ஒரு முடிவுக்கு வந்ததாக நான் கருதுகின்றேன். அந்தப் பந்தி அமர்வில் இயேசு ஒரு புதிய சாசனத்தைஇ ஒரு புதிய உடன்படிக்கையைஇ ஒரு புதிய திசையை உலகிற்குத் தந்துள்ளார்.

கெத்சேமனித் தோட்டத்து நிகழ்வுடன் இயேசுவின் மூன்றாவதும் கடைசியுமான வாழ்க்கைப் பகுதி துவங்கியது என்று நான் துணிகின்றேன்.

ஒவ்வொரு கட்டத்தையும் நீங்களே நற்செய்தி ஏடுகளில் இருந்து படியுங்கள். வசதியாக ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய பகுதிகளை நான் தந்துள்ளேன். சிந்தனைக்கு நான் எடுத்துக்கொண்ட பகுதியை கோடிட்டு காட்டியுள்ளேன்.

பின்னர் நான் உங்களுடன் பகிர விரும்பும் எனது சிந்தனையைப் படியுங்கள். இப்பகுதியைப் படிக்கும் பொழுது செவிமடுங்கள் - படிக்கும்பொழுது செவிமடுக்கும் அதே வேளை உங்கள் ஆழ்மனக் குரலுக்கும் செவிமடுங்கள். இது மிக முக்கியம். அங்குதான் நீங்களே உங்களைப் பார்க்கலாம். முகமூடிகள் இன்றிஇ கவசங்கள் இன்றி உங்களை நீங்கள் பார்க்க வேண்டும். இத் தன்னறிவு ஆன்மீக வாழ்விற்கு அவசியம். இத்தன்னறிவில் ஒரு சவால் கேட்கும். அச்சவாலில் ஓர் அழைப்புக் கேட்கும். அந்த அழைப்பு மனமாற்றத்திற்கு அழைப்பு. அந்த அழைப்பிற்கு நீங்கள் மனந்திறந்து பதில் சொல்லும்பொழுதுஇ அந்த அழைப்பை நீங்கள் ஏற்கும்பொழுது உங்கள்" "சிலுவைப்பாதை"" உங்களை "கல்வாரி"" நோக்கி உங்கள் ஆன்மீகப் பயணமாக வளரும். உங்களுக்கு நீங்களே தலைமைத்துவம் கொடுக்கின்றீர்கள்: கொடுக்கவேண்டும்.

(தலைமைத்துவம் பற்றிய சில கருத்துக்களை "உனக்கு நீதான் தலைவன்" என்ற இறுவட்டைக் கேட்கவும்).

ஓர் அமர்வில் கட்டங்கள் அத்தனையையும் முடிந்துவிடவேண்டுமென்ற கட்டாயம் ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட ஓர் " சிலுவையை" நீங்களாகவே உங்கள் மேல் சுமத்தவேண்டிய அவசியமும் இல்லை.

உங்கள் மனநிலைக்கேற்ப, நேரத்திற்கேற்ப கட்டம் கட்டமாக நீங்கள் படிக்கலாமஇ சிந்திக்கலாம்இ செவிமடுக்கலாம்இ பதிலளிக்கலாம். மனமாற்றம் அடையலாம். உங்கள் சிலுவைப்பாதையில் பயணிக்கலாம். "சிலுவைப்பாதை" ஒரு பக்திப் பயிற்சியாக இல்லாமல், உங்கள் "சிலுவையை" அடையாளங்கண்டு அப்பாதையில் பயணிக்க உதவும். அது ஒரு துணையாக, ஒரு சவாலாக, ஒரு அழைப்பாக மாறலாம்.

வீட்டிலோ, பாடசாலையிலோ, இந்த முயற்சியில் ஈடுபடுவதாயின் சிறு குழுக்களாகக் கூடி நற்செய்தி வாசிப்பு, சிந்தனை, அதன்பின்னர் சிறிது நேரம் மௌனமாக செவிமடுங்கள். பின்னர் உங்கள் செவிமடுத்தலின் பயனை குழுவில் உள்ள மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். - இயேசுவின் பாடுகளைப் பற்றி அல்ல (இயேசுவின் பாடுகள் நடந்தேறி முடிந்தவை. அவற்றுள் ஒழியாதீர்கள்) உங்கள் சொந்தவாழ்க்கையைப் பற்றி, உங்களுள் எழுந்த சிந்தனையைப் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர்அந்தப் பகிர்தலுக்கேற்ப ஒரு சிறு செபத்தோடு அந்தக் குறிப்பிட்ட கட்டத்தை முடித்தும் கொள்ளலாம்.

வாருங்கள்! சிலுவையின் பாதையில் பயணிப்போம்.

சிலுவையின் பாதையில்...

முதலாவது கட்டம்

மத்.26: 36-46

கெத்சேமனித் தோட்டத்தில், இயேசு. அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையான கட்டமிது. நெருங்கிய மூன்று சீடர்களைத் துணைக்கு அழைத்துச் செல்கின்றார். பின்னர் தனியாகச் சென்றார், செபிப்பதற்கு. அவருள் ஒரு மனப் போராட்டம். நடைபெறப்போகும் நிகழ்வுகளை ஓரளவு ஊகிக்க முடிகின்றது. மனப்போராட்டம் வலுப்பெறுகின்றது.

எனது பணிக்காலத்தின் முடிவு இந்நேரம்தானா? எப்படிப்பட்ட துன்பத்தை அனுபவிக்கவேண்டி வருமோ? இது எனக்கு வேண்டுமா? இதிலிருந்து விலகமுடியாதா? இதை அனுபவிப்பதால் வரும் பலன் என்ன? இதனால் எனது இலட்சியம் ஈடேறுமா? நான் கண்ட புதிய உலகம் பிறக்குமா? இதுதான் இறையுள்ளமா?

எமது வாழ்விலும் இப்படிப்பட்ட போராட்டங்கள் வருவதுண்டு. வாழ்வைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்க முனையும் பொழுது இப்படிப்பட்ட போராட்டங்கள் மனதில் எழும்.

துணைக்கு அழைத்துச் சென்ற சீடர்கள் அவருடன் இல்லை. ஒன்றாக



உண்டு குடித்துஇ அவரது அன்புரை கேட்டுஇ அவருடன் மூன்றாண்டுகள் வாழ்ந்த அவருடைய சீடர்கள் அவருடன் இல்லை. வரலாற்றுச் சிறப்புக்கொண்ட அந்தக் கடைசிச் சாசனத்தை இறுதிப்பந்தி அமர்வில் பெற்றுக்கொண்ட சீடர்கள் அவருடன் இல்லை. இதை உணர்ந்த இயேசு தனது தனிமையின் கொடுமையை ஏற்றுக்கொண்டு அழாக் குறையாக அவர்களைப் பார்த்துச் சொன்னார்: "ஒருமணி நேரங்கூட என்னுடன் விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?" (மத்: 26:40). "என்னுடைய இந்தக் கடினமான வேளையிலஇ உங்களுடைய பிரசன்னத்தை நான் விரும்பிய இந்த வேளை என்னுடன் ஒத்துணர்வு கொண்டிருக்க உங்களால் முடியவில்லையா? இயேசுவின் வேதனைக் குரல் சீடர்களுக்குக் கேட்கவில்லை. உண்டகளை அவர்களுக்கு, உறங்கிவிட்டார்கள்.

இந்த நேரம், நான் என்னையும், எனது மக்களையும், பார்க்கின்றேன். நான் கடினமான ஒரு காலத்தினூடாக வேதனையிலும் தனிமையிலும் ஆழ்ந்த பொழுது, அங்கு எனக்கு யாருமே இருக்கவில்லை. என் கதையை நான் சொல்ல முயன்ற பொழுதெல்லாம் அதைத் தட்டிக் கழித்து தங்கள் கதைகளைச் சொல்ல என்னைப் பயன்படுத்தியவர்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

அதேவேளை, காலத்தினூடாக ஒரு பேருண்மையை நான் கற்றுக்கொண்டேன். இது அனுபவ அறிவு. பொல்லாத தனிமையை அனுபவிக்கும் வேளைகளில் அந்தத் தனிமையை அடையாளங்கண்டு, ஏற்றுக்கொண்டு, அந்தத் தனிமை உருவாகும் இடத்தை நோக்கி நான் பயணிக்கும் பொழுது அங்கே ஓர் அழைப்புக் கேட்கும். அந்த அழைப்பு முக்கியமான ஒன்று. தனிமைக்கு அர்த்தம் தருவது: வாழ்விற்கு வளம் தருவது.

இயேசுவுக்கு அந்த அழைப்புக் கேட்டது. தனது தனிமையின் ஆழத்தில் ஆண்டவன் குரல் கேட்டார்.

இறை உள்ளத்திற்கும் எமது விருப்பு வெறுப்புக்களுக்கும் இடையே மனப் போராட்டங்கள் உண்டு. இந்த மனப் போராட்டத்தை அடையாளங்காணும் பொழுது சில தெளிவுகள் ஏற்படுகின்றன. மனமாற்றத்திற்கு வழிவகுக்கின்றது. அங்குதான் இறையுள்ளம் ஓரளவு தெளிவாகும். ஆங்கிலத்தில் இதை discernment என்று அழைக்கின்றோம். ஓர் "உய்த்துணர்தல்" என்று மொழிபெயர்க்கலாமென்று எண்ணுகின்றேன். உய்த்துணர்வு இலகுவானதல்ல.

இயேசு முதலில் தனது விருப்பத்தை- செபமாக்கினார். "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும". நான் முன்னர் சொன்னது போல துன்புற இயேசு விரும்பவில்லை. அதைத் தெளிவாகவே எடுத்துச் சொன்னார்.

ஆனால் அவரது மனப்போராட்டத்தில் சில தெளிவுகள் தோன்றிய பொழுது அவரது விருப்பமும், செபமும் மாறியது.

"ஆனாலும், என்விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்". இறையுள்ளமும் அவரது விருப்பமும் ஒன்றாகிவிட்டன. பாதை தெளிவு. ஆயினும் பயணம் கடிது. அதையும் அவர் உணராமலில்லை.

நான் எனது மக்களைப் பார்க்கின்றேன், பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவர்களை இழந்த மனைவியர், மனைவியரை இழந்த கணவர்கள், பிள்ளைகளின் முகவரியே தெரியாது தவிக்கும் பெற்றோர், முட்கம்பிகளின் பின்னால் வாழ ஏங்கும் "அகதிகள்," (மீள்குடியேற்றம் என்ற பெயரில்தெருத் தெருவாகத் திரியும் தமிழர்கள்), இவர்கள் அனைத்து பேரும் தனிமையை அனுபவிப்பார்கள். இவர்களுடைய சோகமே உருவான கதைகளுக்குச் செவிமடுக்கலாமா? அவர்களது தனிமையில் நாம் ஒத்துணர்வுடன் பிரசன்னமாக இருக்கலாமா? முரணாக, அவர்களின் கதை கேட்க விரும்பாது "அவர்களுக்காக செபிக்கின்றோம்" என்பது போலியானது. மதத்தில் ஒழியும் செயலானது, அது.

இரண்டாவது கட்டம்.

மத்.26 :14 -16, 20-25: 47-50.

மூன்றாண்டுகளாக இயேசுவின் சீடனாக உருவாக்கம் பெற்றவன், யூதாஸ். மற்றைய சீடர்களைப் போலவே அவனும் இயேசுவோடு பல்வேறு இடங்கள் சென்றவன். இயேசுவின் புரட்சி உரைகள் கேட்டவன். இயேசுவின் புதுமைகளுக்கு அவன் சான்று. இயேசுவுடன் உண்டவன், குடித்தவன், அவரது அன்புக்குரியவனாக வளர்ந்தவன். இருந்தும், அதே இயேசுவை, தன்னை உருவாக்கினவரை, தனது குருவை முப்பது வெள்ளிக்காசுக்காகக் காட்டிக்கொடுக்க முன்வந்தானே! ஏன்?

அந்நிய ஆட்சியிலிருந்து தமது மக்களை இயேசு மீட்டுத்தருவார் என்ற நோக்கிலேயே சீடர்கள், இயேசுவின் அழைப்பை ஏற்றார்கள். யூதாஸ் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், இயேசுவின் புரட்சி உரைகள், பேச்சு, புதுமைகள், குணமாக்கல்கள் போன்றவற்றை பார்த்த யூதாஸ், இயேசுவின் நோக்கையும் போக்கையும் புரிந்துகொண்டான் போலும்! அதாவது, தான் எதிர்பார்த்த அரசியல் விடுதலையை பெற்றுத்தரும் தலைமைத்துவம் இதுவல்ல.

அதே வேளை, தலைமைக் குருக்கள் இயேசுவை வெறுத்தார்கள் என்பதையும் யூதாஸ் உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தானோ என்னவோ, இஸ்ராயேலை அடக்கி ஆட்சிசெய்த உரோமையரிடம் அவன் காட்டிக்கொடுக்காமல்இ தனது சொந்த இனத்தவராகிய தலைமைக்குருக்களிடம் காட்டிக் கொடுத்தான். அவர்களுடன்தான் ஒப்பந்தம் செய்தான். ஆயினும், தலைமைக் குருக்களுக்கும் ஆட்சிபீடத்தில் அமர்ந்த அந்நியர்களுக்கும் இருந்த நெருக்கமான "அரசியல் உறவையும்" அவன் அறிந்திருக்கவேண்டும். கெத்சேமனித், தோட்டத்தில் இயேசுவின் மனப்போராட்ட முடிவில் இயேசு உடனடியாக வர இருக்கும் தனது எதிர்காலத்தை உய்த்துணர்ந்து முடிவு செய்த பின்னர்இ யூதாஸ் தனது குருவைஇ தன்னை உருவாக்கினரை கொஞ்சியே வஞ்சித்தான். இயேசு இந்நிகழ்வை முன் கூட்டியே சொல்லிவிட்டார். "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்". (மத்.26:21) அதுவும் பிரியாவிடை விருந்திற்காக இறுதியாகப் பந்தி அமர்ந்தவேளை இதைச் சொன்னார்.



நான் இந்தக் காட்சியை சற்று விரிவாக்கிய காரணம், மேற்கூறிய ஒவ்வொரு வசனத்திலும் நான் என்னோடு இருந்தவர்களைப் பார்க்கின்றேன். எனது இனத்தைப் பார்க்கின்றேன் உங்களையும் பார்க்க அழைக்கின்றேன்.

முற்றிலும் சுயநலன் கருதி நிலைநிற்காத அற்ப சலுகைகளுக்காக எமது இனத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் நாங்கள். இன்று எமது இனம் பாதாளத்தில் இருப்பதற்கு முதற்காரணம் <u>எம்மவரின் காட்டிக்கொடுத்தலே.</u> எமது இனத்தை வரலாற்றினூடாக தொடர்ச்சியாகக் காட்டிக் கொடுத்தவர்கள் நாங்கள். நெஞ்சுக்கு நேர்மையோடு, உண்மையோடு துணிந்து பார்த்தால் இந்தக் காட்டிக் கொடுத்தோரின் பட்டியல் தெளிவாகும். இவர்களை அடையாளங்கண்டு பெயரிட்டு வெட்கப்படுத்த, வேண்டும் எமது இனம். காரணம்இ எஞ்சியிருக்கும் தமிழ் இனத்தைக் காப்பாற்ற இனியும் இந்தக் காட்டிக்கொடுப்போர் இல்லாமல் போகவேண்டுமென்பதற்காக.

இந்தக் காட்டிக்கொடுத்தல், அரசியலில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும், அனைத்து நிலைகளிலும் காட்டிக்கொடுத்தவர்கள், நாங்கள். எம்மைக் காட்டிக் கொடுத்தவர்களால் சித்திர வதைகள் நடந்தன. சிறைப்பட்டோர் பலர், முகவரி இன்றி போனவர்கள் பலர், கொலையிடப்பட்டோர் பலர், உரிமைகளைப் படிப்படியாக இழந்தது, தமிழினம். உடமைகளையும், சொத்துக்களையும் சேமிப்புக்களையும் வீடுகளையும் ஏன்- எமது நிலத்தையே இழந்தோமே! நாமே நமக்கு எதிரிகளானோம்.

இவ்வளவையும் பார்த்த பின்னராவது காட்டிக் கொடுத்தோர் மனமாறினார்களா? மன்னிப்புக் கேட்டார்களா?

<u>நான்</u> காட்டிக்கொடுக்கவில்லையா? வேலைசெய்யும் இடங்களில்இ பணித்தளங்களில்இ அயலில்இ ஏன் சொந்தக் குடும்பங்களில், வீட்டில் <u>நான்</u> காட்டிக்கொடுக்கவில்லையா? உன்னை நன்றாகப் பார். துணிவோடு பார். கவசங்களையும் முகமுடிகளையும் அகற்றிவிட்டுப் பார். நேர்மையோடும் உண்மையோடும் பார்.

ஏமாறிய யூதாசைப் போல விரக்தி அடைந்து தற்கொலை செய்யாதே மனம்மாறி மன்னிப்புக் கேட்டு. புதுவாழ்வு பெறு சிலுவையின் பாதையில்... இந்தக்கட்டத்தில் இது ஒரு சவால். இந்தச் சவாலில் ஒரு அழைப்பு.

மூன்றாவது கட்டம்.


மத்.26 :57-68 மத். 27:1-2, 27:11
மாற்.14 :53-64 மாற்.15 :1-15

இத் தலைப்பைப்பார்த்ததும், கேட்டதும் நீங்கள் ஒரு வேளை முகம் சுழிக்கலாம். இதில் என்ன புதியது?" என்று நீங்கள் கேட்கலாம். காரணம்: அப்படிப் பழக்கப்பட்டு விட்டோம். அதனால் இப்படிப் பட்ட செய்திகளைக் கேட்டும், படித்தும் பேசாமடந்தைகளாகி விட்டோம். வாருங்கள், வழக்கைப் பார்ப்போம்.

தவறேதும் செய்யாத இயேசு, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றார். நீதி மன்றம் மாறி நீதிமன்றம் அனுப்பப்படுகின்றார். பொறுப்பைத் தட்டிக்கழிக்க முனைந்த நீதிபதிகளால், இறுதியில் பிலாத்துவின் முன்னிலையில் இயேசு நிறுத்தப் படுகின்றார். யார் பிலாத்து? உரோமபுரி ஆட்சியில் பிரதிநிதியாக இஸ்ரேயலை ஆட்சி செய்தவன். அந்நியன்! பிலாத்துவிற்கு முன் இயேசுவை நிறுத்தியவர் யார்? இஸ்ராயேல் மக்களின் தலைமைக்குருக்கள். யார் யாருடன் கைகோர்த்து நிற்கின்றார்கள் என்பதை அவதானிக்க வேண்டும். இன்றைய நிலையையும் கூர்மையாக அவதானிக்க வேண்டும்.

இயேசுவில் குற்றம் எதையும் பிலாத்து காணவில்லை. தலைமைக் குருக்கள் பொறாமையில் இயேசுவின் மேல் பழி சுமத்த முனைகிறார்கள் என்று அவன் அறிந்திருந்தான். இயேசுவை விடுதலையாக்க சிறு முயற்சி செய்தான், பிலாத்து. இயேசு செய்த தவறு என்ன? உண்மைக்குச் சாட்சியானார். அநீதியை எதிர்த்தார். அடக்கப்பட்டோரின் விடுதலையை நாடினார். மதச் சடங்குகளாலும்இ சட்டங்களாலும் மக்கள் மேல் சுமைகளைச் சுமத்தியதையும் சாடினார். தலைமைக் குருக்கள் விரோதிகள் ஆனார்கள்.

தலைமைக் குருக்களின் மத ஆணவமும் அதிகார வெறியும்



ஒன்றிணைய அவர்கள் மக்களைத் தூண்டிவிட்டார்கள். மக்களும் மாக்களானார்கள். பிலாத்து பொறுப்பில் இருந்து கைகழுவினான். தனது பதவியைக் காப்பாற்ற வேண்டிய தேவை அவனுக்கு. கலாசாரத்தில் உயர்ந்து நின்ற உரோமை ஆட்சி வரலாற்றுத் தவறை இழைத்தது. இயேசு கொலைக்களம் சென்றார்இ தனது சிலுவையைத் தானே சுமந்துகொண்டு.

இன்றுமட்டும் என்ன? இருபத்தோராம் நூற்றாண்டின் கலாசார உயரத்தில் நிற்கும் நாடுகளில்இ நமது நாடு உட்பட நீதி உண்டா? எங்கள் சமூகத்தில்இ எங்கள் நீதி மன்றுகளில் நீதி உண்டா? எந்த விசாரணையும் இன்றி சிறைகளில் மாதங்களாக வருடங்களாக விரக்த்தியோடு வாழும் மக்களின் வேதனைக் குரல் கேட்கின்றதா? எந்த வழக்குமின்றி வீதிகளிலும், வீடுகளிலும் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின், முகவரியே இல்லாமல் போனவர்களின் அபயக் குரல் கேட்கின்றதா? புற மதங்களை வளர்க்கும் மத முகாமையாளர்களுக்கு இவை தெரியாதா? அன்றேல் தெரிந்தும் தெரியாதது போல நடிக்கின்றார்களா?

எங்களைப் பார்ப்போம் எனது வாழ்வில் நான் நீதியுடன் வாழ்கின்றேனா? மனித உரிமைகளை (கணவன் மனைவி உரிமைகள்இ பிள்ளைகளின் உரிமைகள்இ மாணவ மாணவியர்களின் உரிமைகள்) நான் மதிக்கின்றேனா? அன்றேல் மறுக்கின்றேனா? அநீதியுடன் கைகோர்த்துச் செல்லுகின்றேனா? அநீதியான தீர்ப்புக்களை வீட்டிலும் வேலைத்தளங்களிலும்இ குழுமங்களிலும் வழங்குகின்றேனா?


மனித உரிமைகளுக்காகஇ அடக்குமுறைக்கு எதிராகஇ ஏன் உண்மைக்காகஇ அன்பிற்காகஇ குரல்கொடுக்கும் பொழுது இந்த நவ நாகரிக உலகில் நாம் தண்டிக்கப்படுவோம். தண்டனைக்கு உள்ளாவதும்இ கண்டிப்பிற்குள்ளாவதும்இ புதிதல்ல. ஆனால்இ எதற்காக யாரால் தண்டிக்கப்படுகின்றோம் என்பதுதான் கேள்வி. அந்த நேரம் இயேசுவைப் போன்று நீ தனியாகத்தான் நிற்பாய். ஆனால்இ கடவுள் உன்னோடு.

நான்காவது கட்டம்

மத். 26:69-75 மாற்.14: 29-30 மாற்.14: 66-72
அரு. 18: 22-27.

இயேசுவோடு நெருங்கி வாழ்ந்த மூன்று சீடர்களில் ஒருவராகக் கருதப்படுபவர், இந்தப் பேதுரு. ஒரு முறை இயேசுவை மெசியா என்று அடையாளங்கண்டு அதை எடுத்துச்சொல்லி இயேசுவின் பாராட்டைப் பெற்றவர். இயேசுவுக்கு எந்தக் கேடும் வரக்கூடாதென்று இருமுறை கூறியவர், தலைமைச் சீடனாக உருவானவர்.

இயேசு கைதுசெய்யப்பட்டதும், மனங்குழம்பினார் இவர். சீடனாக அடையாளம் காணப்பட்ட பொழுதுஇ இயேசுவை தனக்குத் தெரியாதென்று முற்றாக மறுதலித்தார்.



சேவல் கூவும் முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று இயேசு ஏற்கனவே கூறியிருந்தார். காட்டிக் கொடுப்பதற்கும் மறுதலிப்பதற்கும் வேறுபாடு உண்டு என்று வாதிடலாம். ஆனால்இ விளைவு ஒன்றுதானே.

நான் எனது நன்மை கருதி மற்றவர்களை மறுதலிக்கவில்லையா? கட்சிவிட்டு கட்சி தாவுவோர் மறுதலிக்கவில்லையா? சுய இலாபங்கள் தேடி மதத்தையே மறுதலிக்கவில்லையா? பங்கு கிடைக்கவில்லை என்றதும் புதுக்கட்சிகள் ஆரம்பித்து மக்களையே மறுதலிக்க வில்லையா?

இந்த நாட்டு அரசியலைப் பார்க்கும் பொழுது அது எவ்வளவு கேவலமாகப் போய்விட்டதென்று கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. மக்களைப் பிரதிநிதிப்படுத்தவா அரசியல் வாதிகள் நாடாளுமன்றம் செல்கின்றார்கள்? யார் காலைப்பிடித்தால் மந்திரியாகலாம் என்பது தானே பலருடைய அரசியல் பிரவேசம்? இவர்கள் எந்த மக்களால் தெரியப்பட்டார்களோ அதே மக்களை மறுதலிக்கின்றார்கள். ஒரு கட்சியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பின்னர்இ பணத்திற்கும் பதவிக்கும் அக்கட்சியை விட்டு வேறோர் கட்சிக்கு தாவும் பொழுது இவர்களைத் தெரிவுசெய்த மக்களை இவர்கள் மறுதலிக்கின்றார்களே!


நிறுவனமயமாக்கப்பட்ட மதங்களில் மத நிர்வாகிகள் சிலர் அரசியல் இலாபந்தேடி மதம் எடுத்தியம்பும் மதிப்பீடுகளையே மறுதலிக்கவில்லையா?

பெற்றோர் பிள்ளைகளை மறுதலிக்கவில்லையா? பிள்ளைகள் பெற்றோர்களை மறுதலிக்கவில்லையா? கணவன் மனைவியையும்இ மனைவி கணவனையும் மறுதலிக்கவில்லையா? சகோதரர்கள் ஒருவரை ஒருவர் மறுதலிக்கவில்லையா? புகுந்த வீட்டாரின் சொல் கேட்டு பிறந்த வீட்டை மறுதலிக்கவில்லையா?

ஐந்தாவது கட்டம்

மத். 26:67-68 27: 2,28-31 மாற்.14:6515:16-20.

நம்பமுடியவில்லை! உரோமை ஆட்சியில், கலாசார வளர்ச்சி பெற்ற ஒரு சாம்ராஜ்யம்" என்று பெயர்பெற்ற ஓர் ஆட்சியில் கொடிய சித்திரவதை. சாட்டையால் அடித்தார்கள், முள்முடி வைத்தார்கள். நிர்வாணமாக்கி அடித்தார்கள் எள்ளி நகையாடினார்கள். மனிதத்தில் இருந்து மிக கீழே வந்து மிருகங்களானார்கள். இது அன்று.



இன்று... கல்வியிலும் கலாசாரத்திலும் ஓர் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டோமென்று தம்பட்டம் அடிக்கும் இந்த சமூகத்தை பார்ப்போம். எம்மையும் எம்மவரையும் பார்ப்போம். மக்களை காக்கவேண்டிய காவலர்களே இந்த ஈனச் செயலில் ஈடுபடுகிறார்களே. சந்தேகத்தின் பெயரில் மட்டும் கைது செய்யப்பட்டவர்கள் காவல் நிலையங்களில் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகிறார்களே. சிறைச்சாலைகளில் சித்திரவதை. எந்த மக்களின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கினார்களோ அதே ஆயுதங்களால் அதே மக்களை சித்திரவதை செய்தார்களே, "விடுதலை விரும்பிகள்" தமிழ் இயக்கங்கள் அத்தனையும் இந்தக் கேவலமான செயலில் ஈடுபட்டவர்கள். இன்று வரை உயிரோடு இருக்கும் இந்த மக்களிடம் மன்னிப்புக் கேட்டார்களா? இன்று அரசியல் நீரோட்டத்தில் நீந்துகின்றார்களாமே! அந்த நீர் ஓட்டத்தில் நீந்திக் கொண்டும் மக்களை சித்திரவதை செய்கிறார்களே.

கணவன் மனைவியிடையே சித்திரவதை இல்லையா? ஆசிரியர்கள் மாணவ மாணவிகளை சித்திரவதை செய்யவில்லையா? வறிய மக்களை வேலைக்கு வைத்திருக்கும் "துரைமார்" அந்த வேலையாட்களை சித்திரவதை செய்யவில்லையா? மூட்டை சுமக்கும் மக்களை கொழும்பு நகரிலேயே பார்க்கின்றோமே! அது ஒரு சித்திரவதை இல்லையா? குழந்தைகள் கடின வேலைக்கு உட்படுத்தப்படுகிறார்களே. இதுவும் ஒரு சித்திரவதைதானே.

சித்திரவதை பல வடிவங்கள் பெறுகின்றன. உன் வடிவம் என்ன?

ஆறாவது கட்டம்

மத். 27:32 மாற்.15: 21 லூக். 23: 26.

இயேசு தமது சிலுவையைத் தானே சுமக்க கல்வாரிக் குன்று நோக்கி இழுத்துச்செல்லப்பட்டார். அடிபட்ட மேனி, உணவற்ற வயிறு, முள்முடி அழுத்திய தலை, சுமையாக சுமந்த சிலுவை மரம். இந்நிலை கண்டு நெஞ்சு நெகிழ்ந்தோ அன்றேல் கல்வாரி செல்லும் முன்னரே "இவன் பாவி விழுந்துவிடுவானோ?" என்று எண்ணியோ, வயல்வெளியில் இருந்து வந்த சீமோன் என்ற வழிப்போக்கனை இயேசுவோடு இணைந்து அச்சிலுவையை சுமக்கப் பணித்தார்கள் படையினர். சீமோன் விரும்பிச் சுமந்தானா? பயத்தில் சுமந்தானா? தெரியவில்லை. இயேசுவும் அவனுக்கு ஒன்றும் சொல்லியதாக வரலாற்றில் இல்லை.

இந்தக் காட்சியைப் பார்க்கும் பொழுது என்னுள் சில வினாக்கள். இயேசுவோடு மூன்றாண்டு காலமாக உண்டு, குடித்து, அவர் உரை கேட்டு, அவர் புதுமைகள் பார்த்து, அவருடன் ஊர்ஊராகத் திரிந்த சீடர்கள் எங்கே? இயேசுவின் சுமையைப் பகிர அவர்கள் ஏன் இங்கு வரவில்லை? பயமா? தங்களை அடையளாங்காட்டிக்கொள்ள விரும்பவில்லையா? "எமக்கேன் சோலி? "என்று ஒதுங்கி விட்டார்களா? "இவன் வாழத்தெரியாதவன்" தேவையின்றி தலைமைக் குருக்களை எதிர்த்தானே! இவன் இத்தோடு சரி: இங்கு போய் ஏன் நம்முடைய எதிர்காலத்தைப் பாழாக்குவான் என்று தம்முள் வாதாடி ஒதுங்கினார்களா? "எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோமே" என்று அன்று கூறிய சீடர்கள் இன்று எங்கே? இன்பத்தில் பங்குகொண்டவர்கள் துன்பத்தில் பங்கெடுக்கவில்லை. இவற்றில் எல்லாம் உங்களைப் பார்க்கின்றீர்களா? நான் என்னைப்பார்க்கின்றேன்.

இறந்து, பெட்டிக்குள் வைத்து இறுதியாகத் தூக்கிக்கொண்டு போகும் பொழுது அப்பெட்டியைத் தூக்க பலர் முண்டி அடித்துக்கொண்டு முன்வருவதுண்டு ஆனால், அதே நபர்கள் அந்த இழப்பால் துன்புறும், கதறிஅழுவோரின் துன்பத்தில் பங்கெடுக்க மாட்டார்கள். நோவு என்ற சுமையைக் குறைக்க ஒத்துணர்வு கொண்டு அந்த நோவைப் பகிரமாட்டார்கள்.

கொழும்பு மாநகரில் அண்மைக் காலமாக ஒரு பெரிய சிலுவைப்பாதை நடத்திவருகிரார்கள். மரச்சிலுவையைச் சுமந்து செல்ல பல குழுக்கள் நியமிக்கப்படுவார்கள். இறுதிக்கட்டத்தில் (பொதுவாக இவர்கள் இறுதிக்கட்டத்தில்தான் வருவார்கள் என்று எண்ணியோ!) குருக்களும் துறவிகளும் அச்சிலுவையைச் சுமப்பார்கள். பின்னர் இக்காட்ச்சி படங்களாக்கப்பட்டு "தாய்" சஞ்சிகையில் வெளிவரும். அருமையான காட்சிகள், நெஞ்சைத்தொடும் படங்கள். ஆனால், இங்கும் சில வினாக்கள். இதே

தொடர்ச்சி 14ம் பக்கம்

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும்... பதிவுகளுக்கு இன்னும் ஒரு சில நாட்களே உள்ளன

தூய மரியாளின் திருத்தலங்களுக்கு திருப்பயணம் 2010



யூன் 10ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை

- உரேமையில்
  -இரு நாட்கள்
- மெற்றக்கோரியில் (பொஸ்னியா)
  -நான்கு நாட்கள்
- பாரிசில் (அற்புத வெரோனிக்க மாதா)
  -ஒரு நாள்
- பிரான்ஸ் - லூர்து திருத்தலத்தில்
  -மூன்று நாட்கள்
- போத்துக்கல் பத்திமா திருத்தலத்தில்
  -மூன்று நாட்கள்









இன்னும் பல புனிதர்களின் புனிதையரின் திருவுடல்கள், வெனிஸ், மிலான் பாரிஸ், போன்ற நகரங்கள் ஆறுக்கு மேற்பட்ட நாடுகள் ஆன்மீகத்தை ஆழப்படுத்தும் அற்புதமான திருப்பயணங்கள். அனைத்து வழிகாட்டு விபரங்கள், வழிபாடுகள் தமிழில் நடாத்தப்படும். கனடிய கடவுச்சீட்டுகள் உள்ளவர்கள் மட்டுமே இந்த யாத்திரையில் பங்கு கொள்ளலாம்

மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் முற்பணத்துடன் பதிவு செய்தல் வேண்டும்







விமானப்பயணம், ஐரோப்பாவில் நாடுகளுக்கான பயணம் காலை, இரவு உணவுகள் தங்குமிடச் செலவு அனைத்தும் உட்பட (மதிய உணவு தவிர்ந்த) மொத்தக் கட்டணம் அறிந்துகொள்ள மற்றும் பதிவு செய்ய அழையுங்கள்:

416 300 7026



Golden Opportunity Only Once At the request of many. Holy Pilgrimage to International Marian Shrines (Lourdes, Fatima. and Medjugorje) and Rome, and Paris etc.
Visit over Six Countries.

Pls Call : 416.300.7026

துாய நாட்டுக்கும் எகிப்து- யோர்தான் நாடுகளுக்கும் திரு யாத்திரை - 2010 (12 நாட்கள்)

Pilgrimage to Holy Land, Egypt and Jordan - 2010 (12 Days)



புலம்பல் மதில் / பாறை மசூதி


மோசே 10 கட்டளைகளைப் பெற்ற சீனாய் மலை

ரோரன்ரோவிலிருந்து நொவம்பர்
மாதத்தில் பயணம் ஆரம்பம்

வாழ்வின் கனவை நனவாக்கிட
இறைமகன் இயேசு பிறந்த பேத்லகேமைப் பார்க்க
அவரது பொற்பாதங்கள் பதிந்த மண்ணில் நாமும் நடந்திட
புதுமைகள் இடம்பெற்ற நகர்களை நாமும் தரிசிக்க
மலைப் பொழிவை நடாத்திய இடத்தில் நாமும் கூடிட
அவர் செபித்த செபக்கூடங்களில் நாமும் செபித்திட
அவர் திருமுழுக்கு பெற்ற யோர்தான் நதிக்கரையில்
நம் திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பிக்க
கானவூர்த்திருமணம் இடம்பெற்ற இல்லத்தில்
எம் திருமணங்களையும் நினைவுகூர, மீளாய்வு செய்ய,
இறுதி இராவுணவை பகிர்ந்த மேல்மாடியில் நாமும் அமர்ந்திட
குருத்தோலைப் பவனி சென்ற பாதையில் நாமும் செல்ல
அவர் சென்ற சிலுவைப் பாதையில் நாமும் சிந்தித்து சென்றிட
அவர் பலியான கல்வாரியில் நாமும் ஒன்று சேர்ந்திட
ஆண்டவரை அடக்கம் செய்யப்பட்ட இடத்தை
விண்ணேற்பு அடைந்த இடத்தை, இன்னும் எத்தனையோ
இன்றே முடிவு எடுங்கள் இன்றே அழையுங்கள்.
(ஒரு சில ஆசனங்களே உள்ளன.)


கலிலியா கடல்


யோர்தான் நதி


சாக் கடல்



Places to Visit

* Overnight in Tel Aviv hotel by the Mediterranean. Sea with dinner. * Caesarea. * Mt Carmel. * Maggot. * Galilee view from Mt. Abel.
* Overnight Kibbutz on Galilee. * Caesarea Philip. * Jordan River. * Mt. of Beatitudes. * Capernaum * Tabgha Sea of Galilee boat ride.
* Overnight in Kibbutz on Galilee. * Nazareth/Cana. * Mt Tabor. * Jacobs Well, * Samaria Jericho. * Dead Sea. Overnight at Dead Sea hotel with dinner. * Masada. * Ein Gedi. * Qumran. * View Jerusalem from Mt Skopus. * Overnight in Jerusalem with dinner. * Bethlehem.
* Mt. of Olives. * Palm Sunday Way * Garden of Gethsemane. * Church of All Nations. * Way of the Cross (Via delarosa.) * Church of Holy Sepulchre * Dinner at Hotel Evening view of Wester Wall. * Knesset. Ein Karem. * Church of Visitation. * Yad Vashem. * Damascus Gate.
* Mt. Zion. * Church of Last Supper. * David's Tomb. * Jerusalem Old City * Temple Mount. * Al Asqua Mosque. * Western Wall. * Pools of Bethsaida. * Southern Wall Excavations. * City of David. Mount Calvary.
* Garden Tomb * Mount Sinai and * Jordan


Air Fare, Hotel Accommodation Breakfast and Dinner, Local Transports, Admission Tickets for all sites all inclusive.
For More Information
Call: 416 300 7026 Anton Philip
Email: anton.philip@gmail.com

விமானச் செலவு, உள்ளூர் பயணம், விடுதியில் தங்கும் செலவு, காலை இரவு உணவுகள், விசேட நுழைவுக்கான கட்டணங்கள் அனைத்தும் அறிய அழையுங்கள்.

தொடர்புகளுக்கு: அன்ரன் சின்னராசா **416 300 7026**
Email: anton.philip@gmail.com

இச் சிறப்புக் கட்டணம் இவ்வாண்டு மட்டுமே! பதிவுகளுக்க முந்துங்கள்!

5ஆம் பக்கத் தொடர்ச்சி



சிலுவைப்பாதையில் நடந்துசெல்லும் மக்களின் சுமைகளை, மரச் சிலுவையை சுமந்தவர்கள் அறிவார்களா? அறிந்தால் அந்தச் சுமையில் பங்கு கொள்ள முன்வருவார்களா? அங்கனம் வருவார்களானால் மரச்சிலுவையை சுமந்ததில் அர்த்தம் உண்டு.

எனக்கு அறிவு வந்த காலந் தொட்டு எனது தமிழ்ச் சமூகத்துடன் வாழ்ந்து வளர்ந்துள்ளேன். 1958ம் ஆண்டு தொட்டு இன்றுவரை இந்த இனம் பட்ட வேதனைகள், நோவுகள், இழப்புக்களி கொடுமைகள், கொலைகள், காட்டிக்கொடுத்தல்கள், அரசியல் ஏமாற்றங்கள்...... நினைக்க நெஞ்சு நோகின்றது. இந்த மக்களின் வேதனைகளையும் நோவுகளையும் புரிந்தவர்கள் யார்?

இவர்களைப் பிரதி நிதிப் படுத்தத் தேர்தலில் குதிக்கும் அரசியல்வாதிகள் இவர்களை அணுகினார்களா? இவர்களின் சுமைகளை உணர்ந்தார்களா? இவர்களுடன் இணைந்து சுமக்க முன் வந்தார்களா? எங்களைப் பிரதிநிதிப் படுத்த இர்களுக்கு என்ன உரிமையுண்டு? என்ன தகைமையுண்டு?

எல்லாவற்றையும் இழந்து, நம்பிக்கையையே இழந்து, அடிமைகளாக்கப்பட்ட இந்த அவல நிலையில், இந்த வெறுமையிலும் வறுமையிலும் உழலும் நாமாவது ஒருவர் ஒருவருக்கு ஆறுதலாக இருக்கலாமா? ஒருவருடைய சுமையில் பங்குகொண்டு அவரின் அந்தச் சுமையைக் குறைக்கலாமே. இது ஒரு பெரும் பணி, நாலுபேருக்குத் தெரிய வராத அமைதியான பணி ஊடகங்களில் வெளிச்சம் போட்டு வெளிவராத அடக்கமான பணி. துன்புறும் ஓர் இனம் அந்தத் துன்பத்திலாவது ஒன்று கூடலாமா?

ஏழாவது கட்டம்

லூக். 23: 27-31

சிலுவையைச் சுமந்து கொண்டு மிகுந்த வேதனையோடும் நோவோடும் கல்வாரிக் குன்று நோக்கிச் செல்லும் இயேசுவின் கோலங்கண்டு நெஞ்சுருகி அழுதார்களி சில ஜெருசலேம் பெண்கள். இயேசுவின் அந்தக் கொடிய காட்சி இந்தப் பெண்களின் உள்ளங்களைத் தொட்டு விட்டது போலும். கண்ணீர் சிந்தினார்கள். யாருக்காக? அது புரியவில்லை! தெளிவில்லை.

புறத்தில் துன்பத்தைப்பார்த்து நாம் கண்ணீர் விடும் பொழுதெல்லாம் ஒத்துணர்வு கொண்டு துன்புறுவோருக்காக கண்ணீர் விடுகின்றோம் என்று அர்த்தமில்லை.



புறத்துன்பத்தைப் பார்க்கும் பொழுது அக்காட்சி, அன்றேல் அந்நிகழ்வு புதைந்திருந்த எனது துன்பத்தைத் தொட்டு வெளிக்கொண்டு வரலாம் அந்நேரத்தில் நான் எனது துன்பத்திற்குத்தான் அழுகின்றேன்.

இன்னொருவருடைய இழப்பையோ, துன்பத்தையோ, நோவையோ, நீ பார்த்து அழுவாயானால் முதலில் யாருக்காக நீ அழுகின்றாய் என்பதை தெளிவுபடுத்திக் கொள். அன்றேல், உனது அழுகைக்கு அர்த்தம் தெரியாது நீயும் ஏமாற்றம் அடைந்து மற்றவர்களையும் ஏமாற்றி விடுவாய்.

தன்னைப் பார்த்து அழும் ஜெருசலேம் பெண்களின் கண்ணீரை இயேசு அடையாளம் கண்டாரா? தெளிவில்லை. ஆனால், அவருடைய கூற்று தெளிவுடையது.

எனக்காக, எனது துன்பத்திற்காக, எனது நோவிற்காக நான் இப்பொழுது அனுபவிக்கும் இந்தக் கொடுமைக்காக அழாதீர்கள். அந்த அழுகை தேவையற்றது. பயனற்றது ஆனால், இந்த நிலையை உருவாக்கிய உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இப்படிப்பட்ட கொடியவர்களை உருவாக்கிய உங்களுக்காக அழுங்கள். இப்படிப்பட்ட தலைமைக்குருக்களை உருவாக்கி இன்னமும் அவர்களை உயரிடத்தில் வைத்திருக்கும் உங்களுக்காக அழுங்கள். நிறுவன மயமாக்கப்பட்ட அநீதிக்கு நீங்களும் உடந்தைகள். அதற்காக அழுங்கள். "இந்த இரத்தப் பழி" எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்" என்று வெறிபிடித்து பிலாத்துவின் முன்னிலையில் கத்தினீர்களே அந்தப் பழிக்காக அழுங்கள். என்னில் குற்றம் எதுவும் காணவில்லை என்று பிலாத்து மீண்டும் மீண்டும் கூற நீங்கள் "இவனை சிலுவையில் அறையும் அறையும்" என்று உரக்கக் கத்தினீர்களே அந்த வெறிபிடித்த கத்தலுக்காக அழுங்கள், என்றார் இயேசு.


நான் இதை விரிவாக்கியதினால் செய்தியைப் புரிந்திருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். ஆமாம். இன்று தமிழினம் இவ்வளவு கேவலமான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டதன் முதற் காரணம் வரலாற்றினூடாக நாங்களே எங்களைக் காட்டிக் கொடுத்து வந்திருக்கின்றோம். அற்பசலுகைகளுக்காகவும், அமைச்சர் பதவிகளுக்காகவும், நாடாளுமன்றம் செல்ல ஆசைப்படுவதனாலும், அதிகாரத்தில் மிதக்க வெறி கொண்டதனாலும், தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இயக்கங்கள் தோறும் கொலை செய்ததும், சித்திரை வதை புரிந்ததும், பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதும் நாங்களும், எங்கள் பிள்ளைகளுக்காகத்தான். அதற்காக அழுங்கள். விடுதலை இயக்கங்கள் தவறான பாதையில் செல்வதைப் பார்த்தும் உணர்ந்தும் பேசா மடந்தைகளாக இருந்தோமே அதற்காக அழுவோம் எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுவோம். எங்கள் தவறுகளுக்காகஇ எங்கள் பாவத்திற்காக அழுவோம். குற்றங்களை உணர்ந்து, ஏற்றுக்கொண்டுஇ அவற்றிற்காக வருந்தி அழும் பொழுது அங்கு ஒரு மனமாற்றம் ஏற்படலாம். ஓர் இனமாக மன மாற்றம் காணவேண்டும் நாம். (Collective conversion).

எட்டாவது கட்டம்.

அரு. 19: 25-27

தொடக்கத்தில் இருந்தே மரியாள், இயேசுவின் தாய், தனது மகனைப் பின் தொடர்ந்தாள். அவள் தனது மனச்சிலுவையை சுமந்து கொண்டு கல்வாரி மட்டும் சென்றாள். இயேசுவின் ஒவ்வொரு துன்பியல் நிகழ்வையும் அவள் அணுவணுவாக அனுபவித்தாள். இறுதியில் கல்வாரிக் குன்றில் சிலுவையில் அறையப்பட்டு விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே தொங்கி நின்ற தனது மகனை உற்று நோக்கினாள்.

அவள் கதறி அழவில்லை. ஓலமிட்டுக் குளறவுமில்லை. ஆனால்இ துன்பத்தின் வடிவமாக அங்கு நின்றாள். குழம்பினாள். ஒரே நேரத்தில் பல இழப்புக்களை அனுபவித்தாள். அவள் மனம் கேட்டது: "இயேசுவோடு இரவு பகலாகத் திரிந்தஇ கூடிவாழ்ந்த சீடர்கள் எங்கே? இயேசுவால் குணமாக்கம் பெற்ற மக்கள் எங்கே? அவரின் புரட்சி உரை கேட்க கூட்டம் கூட்டமாக வந்த மக்கள் எங்கே? அவரை, அரசனாக்க விரும்பி ஓசான்னா பாடிய மக்கள் எங்கே?" மனம் அழுதது. அழவேண்டும்.



தான் தனது மக்களுக்கு கண்ட கனவு இதுதானா? நன்மையே செய்து உண்மையைச் சொல்லி மக்கள் விடுதலைக்கு தன்னை அர்ப்பணித்த தனது மகனுக்கு இந்தக் கதியா? இப்படியெல்லாம் குழம்பிய அத்தாய்க்கு அந்தக் குழப்பத்திலும் ஓர் அழைப்புக் கேட்டது. "எனது சீடருக்குத் தாயாகு. அவர்களுக்கு தாயாக இருந்து அவர்களுடைய பலவீனத்தில் பலமாக இரு. நான் உலகிற்குக்கண்ட கனவு நனவாகஇ ஏன் நீ கண்ட கனவு நனவாகச் இச்சீடர்கள் தேவை. அவர்களுக்குப் பக்க துணையாக நீ தேவை. அந்த அழைப்பிற்கு அவள் அடிபணிந்தாள். சீடர்களுக்குத் தாயானாள். அச்சீடர் வழிவந்த இயேசுவின் சீடர்கள் அனைவருக்குமே அவள் தாயானாள்.

கல்வாரி மலையில் மரியாளைப் பார்க்கும் பொழுது, இந்த நாட்டின் தாய்மார்களை நான் நினைத்துப் பார்க்கின்றேன். பிள்ளைகளை இழந்த தாய்மார்கள், கணவர்களை இழந்த மனைவியர், இவர்களின் அழுகைக்குரல் ஆழ்வோருக்கு கேட்கவில்லையா? ஏன், இவர்களைப் பிரதிநிதிப் படுத்த தேர்தலில் குதித்தவர்களுக்கே கேட்கவில்லையா? மதங்களை நிர்வகிக்க முன்நிற்கும் முகாமையாளர்களுக்கு இந்த அவலக் குரல் இன்னமும் கேட்கவில்லையா?

சரியோ பிழையோ? தன் மக்களின் விடுதலைக்காக போராடி இறந்த தங்கள் பிள்ளைகளுக்காக இன்றும் அழுதுகொண்டிருக்கும் தாய்மார்களைச் சந்தித்தீர்களா? அவர்களுடைய ஞாபகமாக கட்டிய சமாதிகளைக் கூட சின்னாபின்னமாக்கி விட்டீர்களே? எங்கள் பிள்ளைகளின் ஞாபகங்களே எங்கள் மத்தியில் இருக்கக் கூடாதா? இது பௌத்த தர்மமா? கிறித்தவ பண்பா? புரியவில்லையே? சின்னா பின்னமான இந்தக் கல்லறைகள், எங்கள் சின்னா பின்னமான வாழ்வின் அடையாளங்கள்.

இவ்வளவு குழப்பத்திற்குள்ளும் எமக்கோர் அழைப்புண்டு. குழப்பத்தில் மூழ்கிவிட்டால், அன்றேல் குழப்பம் எம்மை மூழ்கடித்து விட்டால் அந்த அழைப்புக் கேட்காது.

ஒன்பதாவது கட்டம்.


லூக். 23: 34 மத். 27: 32-35 மாற். 15: 21-24 அரு. 19: 17-18.

சிலுவையிலே இயேசுவை ஆணிகள் கொண்டு அறைந்தார்கள். இப்படியும் ஒரு தண்டனையா? அறைவோருக்கு உள்ளம் என்ற ஒன்று இல்லையா? அவர்களின் உணர்வுகள் உறைந்துவிட்டனவா? அன்றுமட்டும் அல்லஇ இன்றும் இப்படியான கொடூரச்செயல்களைப் பார்க்கின்றோமே! மனிதம் இல்லாத மனிதர்களா?

இப்படிப்பட்ட ஒரு கொடூரத்தை அனுபவித்த இயேசு என்ன செய்தார்? கோபித்தாரா? சினங்கொண்டாரா? சபித்தாரா? ஏசினாரா? அத்தனையையும் பொறுத்துக்கொண்டது மட்டுமல்ல, அவர் அவர்களை மன்னித்தார்.

"தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்னார். இது முடியுமான ஒரு செயலா? இதுதான் மனிதமா?

"மன்னிக்கத் தெரிந்தவன் மாணிக்கக் கோவிலப்பா" என்று ஒரு பாடல் வரி உண்டு. மன்னிக்க வேண்டும் என்று இயேசு தனது உரைகளில் அழுத்திச் சொன்னார். "ஏழேழுதரம்" மன்னிக்க வேண்டுமென்று கூறி மன்னிப்புக்கு அளவில்லை என்று எடுத்துரைத்தார், சொன்னதைச் செய்தார். தனது வார்த்தையைத் தானே வாழ்ந்தார். செய்தி சொல்ல வந்தவர், செய்தியானார்.



ஏன் எம்மால் மன்னிக்க முடியவில்லை? சிறு காரியங்களில் கூட எம்மால் மன்னிக்க முடியவில்லையே! ஏன்? பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கினால் மன்னிப்பது கடினம். தங்களைத் தாங்களே தலைவர்களாக்கி கொண்டவர்கள் துறைதோறும் உள்ளார்கள். அரசியலில் மதத்தில், கல்விக் கூடங்களில்; வாணிகத்தில் வீட்டில் ...... பழிவாங்க வேண்டுமென்ற முனைப்பில் மன்னிக்க மறுக்கின்றார்கள். தனி நபர்களை மட்டுமல்ல், குடும்பங்களை, ஊரை, ஒரு சமூகத்தை, ஓர் இனத்தை, ஒரு நாட்டை பழிவாங்க நினைத்து அவர்களை அழிப்பதில் சுகங்காணும் மக்களை இன்றும் காண்கின்றோமல்லவா?

இயேசு அழகுறச்சொன்னார் "நீ பலிகொடுக்க வரும் பொழுது உன் அயலவன் உனக்கு எதிராக உள்ளானென்று நினைப்பாயாகில், பலிப்பொருட்களை அங்கே வைத்துவிட்டு சென்று, ஒப்புரவாடு. பின்னர் வந்து பலியை செலுத்து" நாம் அவ்வண்ணம் செய்கின்றோமா? பழிவாங்கவில்லையா? இப்பொழுதும் அந்தப் பழிவாங்கும் நிலையிலேயே நான் வாழ்கின்றேனா?

இயேசு எப்படி மன்னித்தார்? இது எப்படி முடியும்? உணர்வுகள் ஈரமல்ல. உணர்வுகள் எம்மில் ஒரு பகுதி. உணர்வுகள் வரலாம், போகலாம், மாறலாம். ஆனால் உணர்வுகளை அடக்கி வைப்பது ஆரோக்கியமற்றது. பழிவாங்க முனைவோர் தங்கள் ஆரோக்கியமற்ற உணர்வுகளை அடக்கிவைக்கின்றார்கள். அடக்கப்பட்ட உணர்வுகள் சாவதில்லை. "உயிரோடு" புதைக்கப்படுகின்றன. என்றோ ஒரு நாள் அவை எம்மையும் மீறி வெளிப்படலாம். (சாது மிரண்டால் காடு கொள்ளாது). அன்றேல் பழிவாங்கலில், ஆவலாதி அவதூறு பேசுவதில். மாற்றவர்களின் நற்பெயரைக் கெடுப்பதில் எம்மை ஈடுபட வைத்துவிடும்.

முரணாக. எமது உணர்வை அடையாளங்கண்டு. அதன் ஊற்றை உணர்ந்து அந்த உணர்வை எம்மில் இருந்து பிரிக்கலாம். அதாவது எமது உணர்வுகளுக்கும் எமக்கும் இடையே ஓர் இடைவெளியை (Space) உருவாக்கலாம். இந்த இடைவெளி பெருகப் பெருக எமது உணர்வுகளை நாம் ஆரோக்கியமான முறைகளில் கையாள முடியும்.

பத்தாம் கட்டம்

லூக். *23:44-46* மாற்.*15: 33-37* அரு. *9:28-30*

இயேசு சிலுவை மரத்தில் அறையப்பட்ட நிலையில் கடும் துன்பம் அனுபவித்தார்- "என் இறைவா என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று உரக்கக் கத்தினதாக மாற்கு எழுதியுள்ளார். துன்பத்தின் சிகரத்தில் ஓர் இருள் வரும்போது, என்றும் இறையுணர்வோடு வாழ்வோர் கூட, "இறைவன் என்னுடன்" என்ற அனுபவத்தில் இருப்போர் கூட ஒரு பயங்கரத் தனிமையில், வெறுமையில் ஒன்றுமில்லாமையை அனுபவிப்பார் போலும். The Dark Night Of the Soul என்று ஆங்கிலத்தில் இந்த அனுபவத்தைப்பற்றி ஆன்மிக வாதிகள் எழுதியுள்ளார்கள். (தமிழில்: ஆன்மாவின் இருண்ட இரவு என்று மொழிபெயர்க்கலாமோ?)

இறைவன் என்றும் இல்லாமல் போவதில்லை. இறைத்தன்மைக்கு அது முரணானது. ஆனால் துன்பத்தின் சிகரத்தைத் தொடும் பொழுது, தனிமையின் ஆழத்தை அனுபவிக்கும் பொழுது தோன்றும் ஒரு வெறுமையில், ஒன்றுமில்லாமையில், "அன்பே" இல்லை, "சக்தியே" இல்லை, கடவுளே இல்லை என்ற ஓர் உணர்வு தோன்றும். இந்த வெறுமைக்குள்ளால் இந்த ஒன்றுமில்லைக்குள்ளால், இந்த இரவுக்குள்ளால் பயணிக்கும் பொழுது சாவுக்கும் அர்த்தம் உண்டு. வாழ்விற்கும் அர்த்தம் உண்டு.



இயேசு அந்த ஒன்றுமில்லாமையில், வெறுமையில் "ஆன்ம இரவில் தன்னை இழக்கவில்லை. தன்னைப் புதைக்கவில்லை அதனூடாக வெளிவந்து அகப்பலத்துடன் தன்னை முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பணித்தார். கடவுளோடு சங்கமம் ஆனார். தந்தையும் நானும் ஒன்றென்றார்: இன்று ஒன்றானார்.

சாவு தமிழனுக்கு கொஞ்சமும் புதிதல்ல. ஆயிரக்கணக்கானோர் இறுதிப் போரில் செத்தார்கள். குண்டு மழை பெய்தது. கொடூரமாகச் செத்தார்கள். பல நாடுகளும் ஆயுதம் கொடுக்க ஓர் இனம் அழிந்தது. பௌத்தம் பார்த்திருக்க மக்கள் செத்துக்கொண்டிருந்தார்கள். மதத் தலைவர்கள் என்று தங்களை ஆக்கிக் கொண்டவர்கள் ஒதுங்கியிருந்து பார்வையாளர்களாக மாறியபொழுது ஓரினம் அழிந்துகொண்டிருந்தது. எவ்வளவு சாவுகள்.

உயிருக்காக ஓடிய மக்கள் செத்த உறவினரை, செத்துக்கிடந்த உடல்களைஇ மிதித்துக் கொண்டும் கடந்தும், ஓடினார்கள். உணவின்றிஇ நீர் இன்றி, உடுத்த உடுப்போடு கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு ஓடினார்கள். இவர்களுடைய கதைகளைக் கேட்கும் பொழுது ஓரினமே அந்த இருளின் ஊடாகச் சென்ற உணர்வு.

இந்தச் சாவுகளுக்கு அர்த்தம் இல்லை. இப்படிப்பட்ட இரவினூடாக வந்த மக்கள் இன்னமும் அந்த இருளில் இருப்பதாகவே தோன்றுகின்றது. "எல்லாம் முடிந்தது" என்பது ஓர் உணர்வு. ஒன்றுமில்லையே என்ற ஒரு வெறுமை. அங்கவீனங்களோடு மக்கள் வாழவேண்டுமா என்ற ஒரு விரக்தி. ஓர் இயலாமை. இம் மக்கள் அந்த இருளில் இருந்து மீளக் காலம் எடுக்கலாம் அதை மதிப்பது அவசியம்.

இவர்களோடு ஒன்றிணைந்து அழுவது அவசியம். இவர்களுடைய வெறுமையை, விரக்தியை, புரிந்துகொண்டு இவர்களுடன் மெதுவாகப் பயணிப்பது அவசியம்.

பதினோராவது கட்டம்


மத். 27: 57-60 மாற். 15: 42-47 லூக். 23: 50-56, அரு. 19: 38-42

தான் சுமந்து சென்ற தனது சிலுவையில் அறையப்பட்டு, உயிர்துறந்த இயேசுவை அடக்கம் செய்தார்கள்.

செத்தவர்களை அடக்கம் செய்யக்கூட முடியாத அளவுக்கு நாம் (தமிழர்) தள்ளப்பட்டோம்: காரணம் ஒன்று செத்தவர்களுடைய உடல்கள் கிடைக்கவில்லை.

இரண்டு செத்த உடல்களைக் கடந்து உயிருக்காக ஓட வேண்டிய நிலைப்பாடு. இந்த சிறிய நாட்டில், அதுவும் ஒரு சிறு பகுதியில் எத்தனை "சவக்கிடங்குகள்" (mass graves) இன்னமும் கண்டு பிடிக்கப்படாமல் உண்டு!

சாவோடு, அடக்கத்தோடு வாழ்வு ஒரு "முடிவு"க்கு (முடிவான முடிவல்ல) வருகின்றது. அந்த முடிவை ஏற்கும் முன்னர் அந்த சாவால் ஏற்பட்ட இழப்பின் நோவுக்கு நாம் வருந்த வேண்டும். இந்த வருந்துதல் (grieving) ஒரு படி முறையில் (process) அமையலாம். துன்பம் மட்டுமல்ல சாவால் ஏற்பட்ட இழப்பின் நோ, கோபம் இருக்கலாம். குற்ற உணர்வு இருக்கலாம்: பெரும்பாலும் இருக்கும் அந்த கோபத்தை அடையாளங்கண்டுஇ குற்ற உணர்வை புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு அவற்றினின்று மீட்படைய வேண்டும்.



எமது சமூகத்தை பார்க்கும் பொழுது சாவு ஒரு பெரிய இழப்பு. கடந்த அறுபது ஆண்டுகளினூடாக பாரிய சாவுகளைச் சந்தித்துள்ளது, இந்த தமிழ் சமூகம். இறுதிப் போரில் மட்டும் ஆயிரக்கணக்கான சாவுகளை சந்தித்துள்ளது, இந்தச் தமிழ் சமூகம். இந்த இழப்புகளுக்கு தனிப்பட்ட முறையிலும் (சொந்தங்கள், பந்தங்கள்), ஒரு சமூகமாகவும் (corporate grieve) நாம் வருந்த வேண்டும். அங்ஙனம் செய்வோமாயின்இ அந்த பாரிய இழப்பினூடாக வெளிவந்து நாம் மீட்படையலாம்.

வீடுகளை, சொத்தை, பல்லாண்டுகளாக சேமித்தவற்றை, நிலத்தை, உழைப்பை, வயல்கள் தோட்டங்களை இழந்தோம். அவற்றிற்காகவும் நாம் வருந்த வேண்டும். இழப்புக்கள் இழப்புக்கள் தான்.

இழந்த அத்தனைக்கும் வருந்தி, இந்த நிகழ்வுக்கு நாம் ஓர் "அடக்கம்" செய்ய வேண்டும். அதாவது இந்த மறக்கமுடியாத, மறுக்க முடியாத (denial), மறக்ககூடாத நிகழ்வுகளை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் (a closure).

யார் எமது நண்பர்கள் என்று நம்பியிருந்தோமோ அவர்கள் எங்களை வெறுக்கும் பொழுது, தள்ளிவைக்கும் பொழுதுஇ எங்களில் ஏதோ ஒன்று சாகின்றது. யாரை நம்பி எனது அந்தரங்கக்கதையைப் பகிர்ந்து கொண்டேனோ அவன் நம்பிக்கைத் துரோகம் செய்யும் பொழுது ஏதோ ஒன்று என்னில் சாகின்றது. கூட இருந்தவன்/ள் கூடித்திரிந்தவன்/ள் எனக்குக் குழிபறிக்கும் பொழுது ஏதோ ஒன்று என்னில் சாகின்றது.

வாழ்வில் நான் முக்கியமான முடிவுகளை எடுக்கும் பொழுது ஏதோ ஒன்று என்னில் சாகின்றது. நித்தமும் நாம் எமக்குச் சாகின்றோம். ஆயினும், அவற்றிற்காக நாம் வருந்துவதில்லை. அதனால்தான் நாம் மீட்படையவில்லை போலும்! அதனால்தான் இவ்வளவு நோய்களோடு (உடல் - உள) நாம் வாழுகின்றோமா? அதனால்தான் நாம் உறவுகளை ஆழமாக வளர்க்க முடியாமல் நுனிப்புல் மேய்கின்றோமா?

சாவுகள்- சின்னவையோ- பெரியவையோ- எதுவாக இருந்தாலும் நாம் சாவை ஏற்றுக்கொள்ள வேண்டும். சாவு வாழ்வின் முடிவல்ல. புதியதொன்று பிறக்கும். ஆனால், சாவை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் புதியதொன்று

15ஆம் பக்கத் தொடர்ச்சி


பிறக்க அந்தச் சாவின் இழப்பின் நோவுக்கு வருந்தாமையே “புதிய பிறப்பிற்கு“ ஒரு பெரும் தடையாக அமையும்.

இதனால்தான் என்னவோ நம்மில் பலர் பழையனவற்றைஇ சாவின் இழப்புக்களை பிடித்துக்கொண்டு புதுவாழ்வு பெறாமல்இ விடுதலை பெறாமல் வாழுகின்றோம்.

பன்னிரண்டாம் கட்டம்

மத். 28:1-6 மாற். 16:1-6 லூாக். 24:1-7 அரு.20: 1-8.

மனிதனால் செதுக்கப்பட்ட கல்லறைஇ இயேசுவை அடக்க முடியவில்லை. அவருடைய இலட்சியத்தை, உலகிற்கு (கிறீத்தவர்களுக்கு மட்டுமல்ல) அவர் கண்ட கனவை அந்தக் கல்லறையால் அடக்க முடியவில்லை. பழைய ஏற்பாட்டில் இருந்து, அதனை (ப.ஏ) முறித்து கிறீத்து ஒரு புதிய ஏற்பாட்டை உருவாக்கினார். அனைத்து அடக்குமுறைகளிலும் இருந்து மக்கள் விடுதலை பெற வேண்டும் என்பது அவரது கனவு. சிறப்பாக நாமே எம்மை சிறைப்படுத்திய நிலையில் இருந்து (inner imprisonment) நாம் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பியவர் மட்டுமல்ல, அதற்குரிய வழியையும் காட்டினார் கிறீத்து.



கிறித்துவின் உயிர்ப்புச் செய்தி இது. “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார்.“(லூக். 9:23-24.)

தனது சீடர்கள் யார் என்பதை கிறித்து இந்த அழைப்பில் தெளிவாக்கியுள்ளார். திருமுழுக்கு பெற்ற ஒரே காரணத்தினால் சீடத்துவம் இல்லை. ஏன், குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட ஒரே காரணத்தினாலும் சீடத்துவமில்லை. ஒரு வேளை சட்டரீதியாக, சடங்கு வழியாக திருச்சபை என்னும் நிறுவனத்தில் அவர்கள் சீடர்களாய் கணிக்கப்படலாம்! ஆனால், கிறீத்தவ சீடத்துவம் என்ன?

முதலில் தன்னலம் துறக்க வேண்டும். அன்றாடம் நாம் சந்திக்கும்இ அனுபவிக்கும் பல்வேறு பிரச்சனைகளை ஆய்வு செய்து பார்த்தால் அடியில் தன்னலம் தலை தூக்கும். “அகங்காரத்தில்“ (ahamkara) இருந்து நாம் எம்மை வெறுமை ஆக்குவது தான் நாம் அன்றாடும் சுமக்கவேண்டிய பெரிய சிலுவை. அதிலிருந்து எம்மை நாமே வெறுமையாக்கும் பொழுது ஏற்படும் பரப்பகலத்தில் (space) நான் உண்மையான என்னை (real- self) சந்திக்கலாம். அச்சந்திப்பில் ஒரு விடுதலை உணர்வு, ஒரு புது வாழ்வு பிறக்கும்.

அந்த வெறுமையாக்கும் படிமுறையில் (process) பல சாவுகள்: அந்தச் சாவுகளின் முடிவில் ஒரு புது வாழ்வு, ஓர் அக விடுதலை வாழ்வு. (inner freedom).

கிறித்துவின் உயிர்ப்பை நினைக்கும் பொழுது, எனது உயிர்ப்பை, எனது விடுதலையைத் தேடுவது அவசியம்.

பதின் மூன்றாம் கட்டம்

மத். 28:19 மாற். 16:15 அரு.20: 21.

“நான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்” பொருள் பொதிந்த வசனம், அழைப்பு, மகிழ்வான செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆர்வம் ஏற்படும். அது ஒரு மனிதம் அதே போன்று நான் பெற்ற நன்மையை, நான் அடைந்த விடுதலையை, நான் அனுபவிக்கும் புது வாழ்வை மற்றவர்களுடன் பகிர விழைவது எமது பணி. எமது பணி, மனித வளர்ச்சியில் இருந்து, எமது மனமாற்றத்தில் இருந்து, எமது புதுவாழ்வில் இருந்து வழிந்தோட வேண்டும். அப்பொழுது தான் எனது பணி சாந்தமுள்ளதாக இருக்கும்.

எங்ஙனம் எனது அன்றாட சிலுவையை நான் சுமந்து, எனது அகம்காரத்தில் இருந்து என்னை நானே வெறமையாக்கி, எனது வாழ்விற்கு நானே தலைமைத்துவம் கொடுக்கின்றேனோ அதேபோன்று அத்தலைமைத்துவத்தை நான் அயலவர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். “நீங்கள் மண்ணுக்கு உப்பாய் இருக்கின்றீர்கள்…… நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்” (மத்.5:13- 14). கிறீத்து எம்மை உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் இருக்க அழைக்கின்றார். இது எமது பணி. இது எமது தலைமைத்துவம். சொல்வதைச்செய்வது இன்றைய தலைமைத்துவப் பணிகளில் ஒன்று. நம்பகத்தன்மை அங்குதான் பிறக்கின்றது.

மதமாற்றங்கள் தேவையில்லை: மனமாற்றமங்கள்தான் தேவை. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறீத்தவம் மக்களை, இந்நாட்டு மக்களை ஒரு மனமாற்றத்திற்கு நித்தமும் அழைக்க வேண்டும். எமது ஆலயம்/கோவில் வழிபாடுகள், பக்திகள் ஒரு ஆழமான, ஒருங்கிணைந்த மனமாற்றத்திற்கு இந்த நாட்டு மக்களை நித்தமும் அழைக்கவேண்டும்.

நிறுவனங்களாக்கப்பட்ட மதங்களுக்குப் பொறுப்பாக இருப்போர், மதங்களை வளர்ப்பதை விட, மதப்பிரிவினைகளை உருவாக்குவதை விட மதவெறியை ஊட்டுவதை விட்டு ஓர் ஆழமான ஆன்மீக வாழ்விற்கு இந்நாட்டு மக்களை நித்தமும் அழைக்க வேண்டும். இங்ஙனம் அவர்கள் மக்களை அழைக்கும் பொழுது அவர்கள் மதத்தலைவர்களாக வளர்வார்கள், உயர்வார்கள்.




இச்சிறு நூலில் சிலுவைப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் பல வினாக்களை எழுப்பியுள்ளேன். இந்த வினாக்களுக்கு விடை காணவல்ல. இந்த வினாக்களை நாம் எம்மையே கேட்கும் பொழுது (உங்கள் வினாக்களையும் நீங்களே உருவாக்கி இவற்றுடன் இணைத்துக் கொள்ளுங்கள்), உங்களுள் இருந்து பதில் (response) தோன்றும். அந்தப் பதில்கள்தான் முக்கியம்.

நடந்தவை நடந்தவை. அவற்றுள் சங்கமித்து பிரள்வது ஆரோக்கியமற்றது. நடந்தவற்றில் இருந்து நாம் கற்றுக்கொண்டதென்ன? சில சாவுகள் சில நோவுகள், மனிதரால் உருவாக்கப்படும் அடக்குமுறைகள், அநீதிகள், கொடுமைகள்… தேவையற்றவை. அவற்றை விலக்க மனிதரால் முடியும். நடந்தவற்றிலிருந்து நாம் கற்றுக்கொண்டவை மேலும் அவை நடவாதிருக்க, தடைசெய்ய உதவும். அதுதான் அனுபவ அறிவு, ஞானம்.

துன்பத்தில் அர்த்தம் காணலாம்: நோவில் இருந்து மீளலாம். சிக்கல்கள், வேதனைகள், துன்பங்கள் நோவுகளிலிருந்து வாழ்வொன்று வரலாம் என்ற உள ஆன்மீக வளர்ச்சியில் எனக்கோர் நம்பிக்கையுண்டு. கஷ்டங்கள் கவலைகளிலிருந்து வாழ்வின் அர்த்தத்தை தேடலாம் என்று நான் அனுபவரீதியாக உணர்ந்து கொண்டேன். இது, ஒரு வறட்டு வாதமல்ல: யதார்த்தத்திற்குப் புறம்பான தத்துவமும் அல்ல: வாழ்வில் இருந்து பிரிக்கப்பட்டு அறிவுரீதியாக எழும் இறையியலும் அல்ல.

துன்பத்திலும், கவலையிலும், நோவிலும் அர்த்தம் தேடுவது மனிதம்: கிறித்தவம், சாவிலும் வாழ்வைப் பார்ப்பது, கிறித்தவம். துன்பங்களில் ஒரு சவாலை எதிர்நோக்குகின்றோம். அந்த எதிர் நோக்கில் ஓர் அர்த்தத்தைத் தேடுகின்றோம். அந்த அர்த்தத் தேடலில் மனமாற்றத்திற்கு ஓர் அழைப்பைக்கேட்கின்றோம். அந்தத் தொடர்ச்சியான மனமாற்றத்தில் தான் ஆன்மீக வாழ்வுண்டு.

வாழ்வுண்டானால் வழியுண்டு: வழியுண்டானால் வாழ்வுண்டு. அந்த வாழ்வை நோக்கிப் பயணிப்பது சிலுவைப்பாதை. அந்தப்பயணம்தான் அன்மீகம்.



பின் குறிப்பு:

“சிலுவையின் பாதையில் தமிழர் எமது சிலுவைப் பாதை” என்பது இச்சிறு ஆக்கத்தின் தலைப்பு, இதைப் பார்த்ததும் எம்மில் சிலர் ஏன் “தமிழர்“ என்று குறிப்பிடுவான் என்றொரு வினாவை எழுப்பலாம். முதலாவது இது தமிழில் எழுதப்பட்டது. இரண்டாவது இது இன்று ஈழத்துவாழ் (இலங்கை) தமிழர் நிலைகண்டு, அவர்களுக்குத் துணையாக அமைய வேண்டுமென்ற நோக்கில் எழுதப்பட்டது. வேறு எந்தவொரு இனத்திற்கு எதிராக எழுதப்பட்டதல்ல. நான் மாறினால், எனது சமூகம் மாற வாய்ப்புண்டு. எனது சமூகம் மாறினால், இந்த நாடு மாற வாய்ப்புண்டு. மதங்களை மேவிய (எதிர்த்தல்ல, மறுத்தல்ல) ஓர் ஆன்மீகம் உண்டு. அந்த ஆன்மீகத்தை நாம் அனுபவிக்கும் பொழுது மனித வேறுபாடுகளை மனிதர் உருவாக்கிய செயற்கைத்தடைகளைக் களைந்து ஓர் உலகலாளாவிய ஓற்றுமையைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையில் இச்சிறு ஆக்கத்தில் எழுதப்பட்டது.

பலருக்கு இச்சிறு ஆக்கம் ஒரு சவாலாக இருக்கலாம். சிலருக்கு ஓர் அழைப்பாகக் கேட்கலாம். இன்னும் சிலருக்கு ஒரு வெறுப்பாகவும் அமையலாம். அவரவர் எங்கு நிற்கின்றார்களோ, அங்கு தங்களைச் சந்தித்து (encounter), பார்த்து மனம்மாற இது ஓர் அழைப்பு. நான் என்னைப் பார்க்கின்றேன் நீங்கள்…

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21-10-1957

விண்ணில் 25-03-2009



திருமதி. மாகிறெட் டெய்சிராணி மரியநாயகம்


அன்பே எமதருமை செல்வமே
அகவை நிறைந்ததனால்
ஆருயிரோ போனதில்லை
ஆறாத நோய் வந்து - அன்பே
உமை மாய்க்கவில்லை
பகையின் கொடுவினையால்
பரிதவித்துப் போனதென்ன - அம்மா
நீருண்ட விழியோடு
காலங்கள் கழிகிறது
கலக்கமது மாறாது...

தங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனிமார்.

416-293-4897, 905-794-0726

துயர் பகிர்வோம்

கனகத்தூதன் முன்நாள் இணையாசிரியரும் யாழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளருமாசிய யோசப் இராயப்பு அவர்கள் நிலைவாழ்வு பெற்றார்



கனகத்துாதன் கத்தோலிக்க இதழ் கனடா – ரோரன்ரோவில் 1995ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டது சிலருக்கு நினைவிருக்கலாம். துமிழ் கத்தோலிக்க மக்களுக்கு கத்தோலிக்க செய்திகளை இறையியல் மறைக்கல்வி விவிலியம் திருச்சபையின் படிப்பினைகள் போன்ற அம்சங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கத்தோடு இப்பத்திரிகையை வெளியிடவேண்டுமென்று கருத்து மேலோங்கிய போது இப்பத்திரிகைக்கு ஒரு பெயர் தேவைப்பட்டது. பெயரோ பொருத்தமாகவும் அர்த்தம் உள்ளதாகவும் இருக்க வேண்டு மென்று பல பெயர்கள் பலராலும் முன்மொழியப்பட்டது. ஆனால் யோசப் மா டர் சிபார்சு செய்த பெயரே மிகவும் பொருத்தமாக காணப்பட்டது. கனடாவில் மக்களுக்கு கத்தோலிக்க செய்திகளை எடுத்து வர ஒரு துாதன் தேவை. ஆகவே கனடாவில் கத்தோலிக்க செய்திகளை எடுத்து வரும் துாதனாக கனகத்துாதன் என்னும் பெயரை வைப்போம் எனும் முடிவை எடுத்துக்கொண்டோம். அதை தொடர்ந்து இப்பத்திரிகைக்கு பல பங்களிப்புகளை அவர் வழங்கினார். அவருடைய இப்பத்திரிகைக்கான பணிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

"கத்தோலிக்க உலகுக்கு" குறிப்பாக யாழ் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தை ஆர்வமுடன் செயற்பட கரவெட்டி திரு இருதயக் கல்லூரி அதிபராக பணிபுரிந்து தற்போது நிலைவாழ்வு அடைந்த வின்செண்ட அவர்களிடம் சேர்ந்து ஆற்றிய சேவைகள் அளவிடற்கரியது. மேலும் மறைக்கல்வி தொடர்பாக திட்டங்களை மாணவர்களிடையே அமுல்படுத்தியதும் அது தொடர்பான செயல்பாடுகளையும் அக்காலத்து மாணவர்களும் ஆசிரியர்களும் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். இவர் தனது அன்பு மனைவியை 1978ஆம் ஆண்டு இழந்தார். இவருக்கு 4 புதல்வியரும் ஒரு புதல்வனும் உள்ளார்கள்.

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தாயார் இறைபதம் (படம்)



யாழ் மறைமாவட்டத்தைச்சேர்ந்த அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தாயர் திருமதி மரியம்மா(செல்லம்மா) மரியாம்பிள்ளை (உடையார்) 07.02 2010 அன்று யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தார் என்ற சோகச்செய்தியை கனகத்துாதன் வருத்தத்துடன தன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறது.

சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் 90களில் நடந்த இடம்பெயர்வின் பின் யாழ்ப்பாணத்திலேயே நிரந்தரமாகக் குடியேறி வசித்து வந்தார்.சில்லாலையில் உடையார் குடும்பம் எனஅழைக்கப்படட் குடும்பத்தின் தாயக 8 பிள்ளைகளைப்பெற்று உத்தம கத்தோலிக்க குடும்பமாக வளர்த்து எல்லோரையும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்து பெண் பிள்ளைகள் எல்லோரும் லண்டன் நகரில் வாழ்வமைத்தபின் லண்டன் மாநகரில் சிலகாலம் அவர்களோடு தங்கியிருக்கும் பாக்கியமும் பெற்றவர்.


"செல்லம்மாக்கா செல்லம்மாக்கா" என்று எல்லோாரலும் அன்பாக அழைக்கப்பட்ட இவர் மரியாயின் சேனை - மாசில்லா மாதா கூட்டம் போன்ற பத்திச்சபைகளிலும் ஊரின் முன்னேற்றப்பணிக் கூட்டங்களிலும்பிரதான அங்கம் வகித்து பணிபுரிந்ததுடன் தினசரி திருப்பலியில் கலந்த கொண்டு கிறிஸ்தவ முன்மாதிரிகையான வாழ்வு வாழ்ந்தவர். உள்ளது அமைதியை வெளிக்கொணரும் மெதுவான புன்சிரிப்பாலும் அன்பான பேச்சாலும் அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் வல்லமை பெற்ற இவர் சின்னறோமை என்று அழைக்கப்படும் சில்லாலைக் கத்தோலிக்க கிராமத்தில் அனைவராலும் விரும்பி நேசிக்கப்பட்ட ஒருவராவார்.

தனது மகனை யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்ற அர்ப்பணித்தமையை தனது பெருமையாகவும் பாக்கியமாகவும் எப்போதும் கருதி எல்லோர் முன்பும் அதனைப் பறைசாற்றி வந்த இவர் குருக்கள் மேல் விசேட அன்பும் மதிப்பும் கொண்டவர்.

இரண்டு தசாப்தங்களுக்கு அதிகமாக யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றியுள்ள அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் யாழ்மறைமாவட்டத்தின் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியாரக 97 முதல் 2007 வரை பத்தாண்டுகள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடதத்தக்கது. ஊடகவியலாளரான இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் விரிவுரையாளராகப் பணியாற்றியபின் யாழ் பல்கலைக்கழக புலமைப்பரிசில்பெற்று லண்டன் செபில்ட் கலாம் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் காலாநிதி பட்ட ஆய்வுக்ல்வியை மேற்கொணடுள்ளார்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் தாயர் திருமதி மரியாம்பிள்ளை மரியம்மா இறைவனில் இளைப்பாறுவாராக.

அமுதுப்புலவருக்கு எமது அஞ்சலி



செவாலியர் இளவாலை அமுதுப் புலவர் -அருட்பணி யோசப் சந்திரகாந்கனின் தந்தையாரும் அமுதுப் புலவர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமுதசாகரன் அடைக்கலமுத்து அவர்கள் 24 பெப்ரவரி 2010இல லண்டனில் இறைவனடி சேர்ந்தார். தமிழ் ஈழம் நெடுந்தீவில் 15.09.1920 ஆம் ஆண்டு பிறந்த இவர் இளவாலையை வாழ்விடமாகக் கொண்டவர்.

வித்துவானாக, ஆசிரியராக, அதிபராகத் தனது பணியினைத் தொடர்ந்தவர் எழுத்துத் துறையில் ஓர் ஆதவனாகப் பிரகாசித்தார். பல நூற்றாண்டு மலர்களின் ஆசிரியராகவும், வீரகேசரி, காவலன், தினகரன், ஈழநாடு போன்ற தினசரிப் . பத்திரிகைகளிலும் தனது ஆக்கங்களை எழுதிக் குவித்தார். இவரது படைப்புக்கள் பல இலங்கை அரசினால் தமிழ்ப் பாடத்திட்டத்திலும் இணைக்கப்பட்டிருந்தன. இலண்டனில் வாழ்ந்து வந்தபோதிலும் அடிக்கடி ஐரோப்பிய, ஆசிய, அமெரிக்க, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் அழைக்கும் இடமெல்லாம் சென்று வருந்தவர். அவரின் தமிழ் அறிவும், நகைச்சுவை கலந்த பேச்சும் அவருக்கே சொந்தம். அவருடைய பேச்சுத் தமிழும், எழுத்துத் தமிழும் எப்போதும் இனிக்கும். கவிதை, கட்டுரை, நாவல், வரலாற்று நூல்கள் என எழுதிய நூல்கள் பலவாகும்.

மாதா அஞ்சலி (கவிதை), நெஞ்சே நினை, இவ்வழிச்சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள் (வைத்தியநூல்), அமுதுவின் கவிதைகள் 1991, அன்பின் கங்கை அன்னை திரேசா (மூன்று பதிப்புக்கள்), மடுமாதா காவியம், இளவாலை அன்னம்மாள் வரலாறு, அமுதுவின் கவிதைகள் (திருத்திய பதிப்பு), இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள், பூந்தமிழில் பொன்னாடைகள் என பலவாகும். கிடைத்த பட்டங்கள்: சொல்லின் செல்வர், புலவர் மணி, செந்தமிழ்த் தென்றல், முப்பணி வேந்தர், கவியரசர், தமிழ்க்கங்கை, பாவேந்தர், மதுரகவி, மகாகவி, கலாபூசணம், கௌரவ கலாநிதி, முத்தமிழ் அறிஞர் என்பவற்றோடு வத்திக்கான் பாப்பரசரிடமிருந்து கிடைக்கப்பெற்ற "செவாலியர்" பட்டம் மிகவும் உயர்வானது. இப்பட்டம் தமிழுலகில் உலகிலே ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்திருக்கின்றது.

ஈழமண் மேலும், அன்னை தமிழின் மேலும் தாளாத பற்றுடையவர் புலவர்மணி. ஈழத்தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகப் படும் இன்னல்களைத் தனது நூல்களிலே கவிதைகளாக வடித்துள்ளார். எப்போதும் சிரித்த முகமும், நிமிர்ந்த நடையும், தமிழ் இலக்கணத்தை அப்போது வாழ்ந்த தமிழ் அறிஞர்களான பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி இளமுருகனார், போன்றோரிடம் ஐயந்திரிபுறக் கற்ற பழுத்த அறிவு அவரின் பேச்சிலும், எழுத்திலும் தெள்ளமாகத் தெரியும்.

இவர் தமிழ் அன்னைக்குத் தனது மரபுக்கவிதைகளால் பல ஆண்டுகளாக அர்ச்சனை செய்வதால் தமிழ் உலகில் மிக உயர்ந்த இடத்தில் வைக்கப்படுகிறார். தான் வாழும் காலத்தில் தனக்கு உதவுபவர்களையும் ஒருநாளும் மறவாத நன்றியுணர்வு மிக்க ஒரு நல்ல மனிதராகவும், தெய்வ பக்தி மிக்க ஒருவராகவும் எம்மிடையே இலண்டனில் வாழ்ந்த அவர் இன்று அமரர் ஆகிவிட்டார்.

கண்ணீரில் 41ஆம் நாள்



அன்னை மடியில்
20.11.1936

ஆண்டவன் அடியில்
14.02.2010

திருமதி மேரிராணி பாக்கியரஞ்சிதம் நீக்கிலாப்பிள்ளை

நாம் பார்த்த தெய்வம் நீங்களே அம்மா
எமது இதயத்தின் சிகரம் நீங்களெ அம்மா
ஆயிரம் ஆயிரம் ஜென்மங்கள் கடந்தாலும் எமது
அழியாத செல்வம் நீங்களே அம்மா

பத்து மாதங்கள் கருவிலே சுமந்த அம்மா
கருவறையில் எம்மை வரைந்த துாரிகையே – உங்கள்
கருணைக்கு ஏதம்மா வரையறை
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்தாய் அம்மா
உம் சிறகினுல் தினம் எம்மை போர்த்தாய் அம்மா
அண்ணையாய் தந்தையாய் எம்மை வளர்த்தாய் அம்மா
இன்று இறைவன் வீட்டில் பப்பா அண்ணாவுடன் இறைந்தீர் அம்மா

தகவல் : பாக்கியறெஜினோல்ட்
பிரிவால் துயவுறும் அன்பு மகன், மருமகள்
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்

மரியாயின் சேனை தவக்கால ஞான ஒடுக்கம்

- தொகுப்பு: மேரி சமா தேவநாயகம்.

சிந்தனை "இதோ மனிதன்" யோவான்:15:5

புனித ஆரோக்கிய அன்னை ஆலய மரியாயின் சேனை, மருதமடு அன்னை பிரசீடிய அங்கத்தினரும், நற்கருணை வளங்குவோரும் இணைந்து ஓர் ஞானஒடுக்கம், கடந்த மார்ச்மாதம் சனிக்கிழமை 6ம்திகதி ஹெமில்ட்டனிலுள்ள, கனேடிய வேதசாட்சிகள் ஆலயத்தில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை சிறப்பாக நடைபெற்றது.

சேனை அங்கத்தினர் அங்கு சென்றதும், ஆலயத்தில் திருப்பலி அருட் தந்தை ஸ்ரனிஸ்ரன் செல்லவநாயகம் தலைமையில் நிறைவேற்றப்பட்டது. திருப்பலியின் நிறைவில் அருட்தந்தை எம்மை ஆலயமண்டபத்திற்கு அழைத்து, நடைபெறவிருக்கும் ஞானஒடுக்க நிகழ்ச்சி நிரல் பற்றியும், தேனீர் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும்படியும் அறிவித்தார்.

காலை 10.00 மணிக்கு ஆலயத்தில் அருட் தந்தை ஸ்ரனிஸ்ரன் அடிகளாரின் வரவேற்பு செபத்துடன் ஞானஒடுக்க உரை ஆரம்பமானது. நம் ஆண்டவரின் பாடுகள், மரணம், உத்தானம் ஆகியவற்றைச் சிந்திக்கும் இத்தவக்காலத்தில், அடிகளாரின் தவக்கால சிந்தனை எம்மை பெரிதும் ஆண்டவர் பக்கம் செல்ல உந்துகோலாக அமைந்தது. அவர் எடுத்துக்கொண்ட விடயம்.

"இதோ மனிதன்" யோவான் 19ம் அதிகாரம் 5ம் வசனம்.

பிலாத்து இயேசுவைச் சாட்டையால் அடிக்கச்செய்தான்.
ஓர் முள்முடி பின்னி அவர் தலையின்மேல் வைத்து,
செந்நிற மேலுடையை அவருக்கு அணிவித்தார்கள்.

தவக்காலங்களில் இந்நிகழ்வை நாம் நினைவுகூர்வது இற்றைக்கு 2000 ஆண்டுகள்தோறும் நடைபெற்றுக்கொண்டுதானிரக்கின்றது . இதனால் நாம் என்ன செய்தியை பெற்றுக்கொள்ளுகின்றோம்?. 33 வயது நிரம்பிய ஓர் இளம் வாலிபன் சாட்டையால் அடிக்கப்பட்டால் எவ்வளவுதூரம் அவரது உருவம் குலைந்து, தசையும், இரத்தமும் ஆறாகப்பெருகிய நிலையில், முள்முடியை தலையில் அணிவித்து நின்றால் எத்தகைய வேதனையை அனுபவித்திருப்பார் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். எனவும், இத்தகைய பாடுகள், வேதனைகள், துன்பம் அனுபவித்தவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன், நாம் அவரை ஆண்டுதோறும் நினைவுகூர்தல் எனவும், இயேசு சிலுவைச்சாவை ஏற்குமளவிற்குக் கீழ்படிந்து, தம்மையே தாழ்த்தி, வெறுமையாக்கிக்கொண்ட பங்கினையையும், உலக மாந்தர் அனைவருக்காகவும் தம்மையே பலியாக்கிய இயேசுவின் தன்னலமற்ற தியாக அன்பு எத்தகையது என்பதையும் எமக்கு நினைவூட்டுகின்றது எனவும், பல நாளாந்த உதாரணங்கள் கொண்டு விளக்கிக் கூறினார்.

10 நிமிட இடைவேளைக்குப்பின் அருட் தந்தை லூயி மொன்வோட் அடிகளார் தலைமையில் திவ்விய் நற்கருணையின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்டது. இயேசு திவ்வியநற்கருணையில் உயிரோடு எம்முடன் இருக்கின்றாா என்பதை பல சம்பவங்களின் நிகழ்வுகள்மூலம் தெளிவாக விளக்கிக்கூறினார். திருப்பலியில், அருட்தந்தையர்களுக்கு உதவியாக நற்கருணை வளங்கும் பணியாளர்கள் என்னும் பொதுநிலையினர் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகள் பற்றியும், நற்கருணையைப் பெற்றுக்கொண்டு, அதை உட்கொள்ளும் கிறிஸ்தவர்களாகிய நாமும் கிறிஸ்துவின் உடலை உண்டு, இரத்தத்தைப் பருகின்றோம் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு, நாமும் கிறிஸதுவுக்கு எப்போதும் பிரமாணக்கமாகவும், சாட்சியாகவும் வாழவேண்டும் என்ற உண்மையை வெளிப்படுத்திக் கூறினார். நற்கருணை எழுந்தேற்றம் ஆசீர்வாதத்துடன் 1.30 மணியளவில் அருட் தந்தை லூயி மொன்வோட் அடிகளாரின் உரை நிவைுபெற்றது.

மதிய இடவேளையில் மண்டபத்தில் அருட் தந்தை ஸ்ரனிஸ்ரன் அடிகளார் எமக்கு மதிய உணவுகளை ஒழுங்குபடுத்தியிருந்தார். இதில் பங்குபற்றிய 50 பேரும், வயிறார அறுசுவை ஐக்கிய விருந்தில் கலந்துகொண்டனர்.

மதிய இடைவேளையின்பின் மௌன சிந்தனை தியானம் ஆலயத்தில் நடைபெற்றது. அந்நேரத்தில் பாவ சங்கீர்த்தனம். (ஓப்புரவு அருட்சாதனம்) வழங்கப்பட்டது. ஞான ஒடுக்க நிறைவில் எமது பங்குத் தந்தை கபிரியேல் அருள்நேசன் அடிகளார் திருப்பலியை நிறைவேற்றினார். , இத்தவக்காலத்தை அர்த்தமுள்ள முறையில் பயன்படுத்தி. செபம், தபம், தானம் மூலமும், ஒறுத்தல் முயற்சிகளைக் கடைப்பிடித்து வாழவும், மனமாற்றத்தின் காலமான இத் தவக்காலத்தைப் பயன்படுத்தி, எமது இருளான பாவவாழ்க்கையை விட்டு, பாவசங்கீத்தனம் செய்து, பாவமன்னிப்புப்பெற்று, சிறப்புற வாழவும், விண்ணக தந்தையின் வீட்டில் எமக்கு இடத்தை தயார் செய்துகொள்ள வேண்டுமெனவம் கூறிமுடித்தார்.

சேனைத் தலைவர் தாசீசியஸ் மொறிஸ் நன்றியுரையைத்தொடர்ந்து தேனீர் விருந்துபசாரத்துடன் ஞான ஒடுக்கம் சிறப்புற நிறைவுபெற்றது.

தூய வாரத் திருவழிபாடுகள் 2010

றொரன்ரோ - 172 Leslie Street (Leslie & Queen)
தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில்

பெரிய வியாழன் (01-04-2010)
இரவு 9:00 மணி திருவழிபாடு - (திருமணித்தியாலம்)
பெரிய வெள்ளி (02-04-2010)
மாலை 5:00 திருவழிபாடு
பாஸ்கா திருவிழிப்பு (03-04-2010)
இரவு 10:00 திருவழிபாடு
உயிர்ப்பு ஞாயிறு (04-04-2010)
மதியம்: 12:00 - திருப்பலி
மாலை 4:30 - திருப்பலி இடம்பெறாது

மிசிசாகா - 7407 Darcel Avenue (Darcel & Morningstar Drive)
Our Lady of the Airways Church ஆலயத்தில்

பெரிய வியாழன்: இரவு 7:30 - திருப்பலி
மாலை 9:00 - 10:00 திருமணித்தியாலம்
பெரிய வெள்ளி: இரவு 9:00 திருவழிபாடு
பாஸ்கா திருவிழிப்பு: இரவு 10:30 பாஸ்காத் திருவிழிப்பு

நோர்த் யோக் - 80 Shoreham Drive, North York
St. Augustine of Canterbury Church ஆலயத்தில்

பெரிய வியாழன்: இரவு 7:00 திருப்பலி
பெரிய வெள்ளி: இரவு 9:00 திருவழிபாடு
பாஸ்கா திருவிழிப்பு இரவு: 11:00 திருவழிபாடு



றொரன்ரோ
- தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில்

புதமைப் புனிதர் தூய அந்தோனியார் பெருவிழா ஜூன் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 செபமாலை - திருப்பலி - திரு உருவ சுற்றுப்பிரகாரமும் இடம்பெறும்.
ஆயத்தமாக ஏப்ரல் 13ம் திகதியிலிருந்து செவ்வாய்கிழமைகளில் நவநாட்கள் செபமாலை திருப்பலியுடன் இடம்பெறும்.

'இலங்கையின் பாதுகாலவர் எனக் கருதப்படும் பேறுபற்ற யோசப் வா அடிகளாரின் 300வது ஆண்டு விழா ஜனவரி 18ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

Tercentenary Jubilee of Blessed Joseph Vaz was delacred in Sri Lanka on 16th January 2010.



Joseph Vaz was born on 21st April, 1651, in the village of Benaulim in the territory of Goa, then the capital of the Portuguese colonies in the Far East. He received his basic education within the family, but then went to college – to the Jesuits to study humanities; to the Dominicans to study theology. Joseph was ordained priest in 1676 and after a period of almost free-lance work, was invited by the Patriarch of Goa to work at Kanara, where he remained for some years, distinguishing himself by his pastoral zeal.

The Tercentenary Jubilee of Blessed Joseph Vaz declared on the occasion of remembering when he was called to Eternal Kingdom on 16th January 1711.

He returned to Goa, and in 1686, with some other priests, started an Oratory, receiving the necessary information and help from the Congregations in Portugal. In April, 1687, however, he went as a missionary to the island of Ceylon (today Sri Lanka). He arrived incognito at Jaffna and remained on the island for 24 years, fulfilling his apostolate in very difficult circumstances – having to travel and celebrate the sacraments at night, always in disguise, and being constantly pursued by the Dutch Calvinist authorities, who sought to put an end to his single-handed attempt to keep the Catholic faith alive on the island. His work was blessed with success and he succeeded in strengthening the faith of many, comforting the suffering and the persecuted.

Joseph decided to make his base in the Kingdom of Kandy, in the island's interior, but on arrival was arrested as a spy and put in prison. He was released after having prayed for and obtained a miraculous fall of rain, so ending a prolonged drought. After that the King of Kandy gave him his personal protection.

In 1696 the Oratory Fathers of Goa began to arrive on the island and so a properly constituted mission was established. Joseph refused the position of Vicar Apostolic. Preferring to remain a humble missionary, continuing his unstinting work for the people. He translated into Singalese and Tamil, (the local languages), various prayers and a catechism.

On 16th January, 1711, he knew he was dying. He asked for and received the Last Rites and his faithful followers gathered around his bed. 'Always live according to God's inspiration,' he told them. At midnight, holding a candle in his hand, he pronounced the holy name of 'Jesus' with great clarity and fervour, and, commending his soul into his Saviour's hands, he died. He left a marvellous legacy: 70,000 Catholics, 15 churches and 400 chapels.

" God chose His disciples as He wills. The disciples Our Lord chose, all were not perfect people. But God called them to Himself and made them strong, made them to be strong and committed missionaries. Our Lord lived with them, performed miracles before their eyes, he felt weary and tired, travelled with them preaching God's Kingdom, prayed with them, ate with them and suffered with them. And ultimately he formed them as he wanted and made them very convinced and dedicated missionaries. Every missionary is a chosen one by Christ. It was so with Blessed Joseph Vaz. Having born in India, he would have very well served the people there. But as he grew up closer to the Lord, he heard the cries of the people of God in Sri Lanka. So he set forth to come to Sri Lanka. The Lord called him and sent him to an unknown land to lookafter His people."

There is a divine plan for everyone of us. God calls and chooses some for a very special purpose, He wants them to committ themselves to Him totally all the days of life. Our temporary life here on earth will pass away. Sometimes we feel it was recently we went to school, it was recently we lived as young men and travelled around, but soon we realize that we are growing old, we feel pain in our limbs and legs, and we cannot stop all our physical changes. All these things will pass away. But our life in God is Eternal. It is for this Eternal life we have to strive everyday. So we called to live a life in the Lord and give a place for God in our hearts. If our hearts are filled with hatred, jealousy, envy, revenge, divisions, injustices and chaeting, then there is no place in our hearts for God. We need to give our hearts completely to the Lord and must have a longing to live with Him always. This is what made Blessed Joseph Vaz to come to Sri Lanka and strengthen the faith of the people of Sri Lanka"

காவியக்களம் (ஒரு கண்ணோட்டம்)

அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளால் 1965ஆம் ஆண்டு சிறீலங்கா-யாழ் நகரில் ஸ்தாபிக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம் தற்போது கனடா உட்பட உலகின் பல பாகங்களில் குறிப்பாக எமது தாயகத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது. கனடாவில் 1993ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் இன, மத அரசியல் சார்பற்ற மன்றமாக இயங்கி வருடாவருடம் பல கலைநிகழ்ச்சிகளை நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் பங்குனி 20ஆம் நாள் மாலை வுழசழவெழ ஊயவெனய ஊாசளைவயைெ ஊழடடநபந கலையரங்கில் பத்திப் பரவசமான "காவியக்களம்" என்ற யேசுவின் திருப்பாடுகள் காட்சி மிகவும் சிறப்பாக மேடையேறியது. வழமையாக நிகழ்த்தப்படும் இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனடாவின் தேசியப்பண், மங்கள ஒளியேற்றல் மற்றும் ஆசியுரைகளைத் தொடர்ந்து காட்சிகள் ஆரம்பமாகின.

அமைதி இழந்து, அன்பிழந்து, அறமிழந்து துயரப்பட்ட உலகம். இதைச் சீர்செய்ய உலகிற்கு ஒருவர் வருவார் என தீர்க்கதரிசகரால் எடுத்தியம்பிய காட்சியைத் தொடர்ந்து வரிசைக் கிரமத்தில் காட்சிகள் தொடர்ந்தன. திருமுழுக்கு, அருளப்பரின் உபதேசம், கிறீஸ்த்துவின் பிறப்பு, மூன்று அரசர்களின் தரிசனம், யேசுவின் போதனைகள் சில முக்கிய புதுமைகள், யேசு சாத்தானால் சோதிக்கப்படல், விதவையின் இறந்த மகளை உயிர்ப்பித்தல், அசுத்த ஆவியை அகற்றுதல், கள்ள ஞானிகளைக் கண்டித்தல், திருமணப் பந்தியில் நீரை இரசமாக்குதல் போன்ற நிகழ்ச்சிகள் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டு அத்துடன் பின்னணி இசை இதற்கு மெருகூட்டியது.
தாவீதின் மகனுக்கு "ஓசான்னா" என்ற வாழ்த்துக்களுடன் சென்ற மக்கள் திரளைக் கண்ணுற்ற பரிசேயர்கள், தலைமைக் குருக்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை நடத்துவதும் சதித்திட்டம் தீட்டுவதும் மிகக் கவர்ச்சியாயிருந்தது மட்டுமல்லாமல் நடிகர்களின் சொல்லாற்றல், நடிப்பு மிகவும் பாராட்டத் தக்கதெனலாம்.

யேசுவின் கடைசி இராப்போசன விருந்து, ஜெத்சமனித் தோட்டத்தில் யேசு வியர்வை சிந்திச் செபிக்கும் காட்சி அத்துடன் விழித்திருந்து செபிக்காமல் உறங்கும்



அப்போஸ்தலர்களின் நடிப்பும் சிறப்பாயிருந்தது. இதைத் தொடர்ந்து யூதாஸ் முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தல், பிலாத்துவின் முன் யேசு நிறுத்தப்படல், பொய்க் குற்றச் சாட்டுகள் சுமத்தப்படல், கற்றூணில் கட்டியடிக்கப்படல், முன்முடி தரித்தல் போன்ற காட்சிகள் நற்செய்தியில் உள்ளபடியிருந்தபடியால் பார்வையாளர்களைப் பரவசத்திற்கு இழுத்துச் சென்றதெனலாம்.

பிலாத்துவினால் மரணத் தீர்ப்பு வழங்குமுன் கள்வன் பரபாஸ் என்பவனை விடுதலை செய்யும் காட்சியும் இந்த நீதிமானின் இரத்தப் பழியில் பங்கில்லை எனக் கை கழுவும் காட்சியும் சிறப்பாயிருந்தது. யேசுவின் சிலுவைப் பாதை சிலுவை மரணம் பார்வையாளர்களை சிந்திக்க வைத்தது மட்டுமல்லாமல் கிறீஸ்தவர்களின் தவக்கால நிகழ்ச்சியாக "காவியக்களம்" நிகழ்ச்சி நடாத்தப்பட்டதனால் மக்களை இறைவன் பால் இழுக்கும் ஓர் உந்து சக்தியாகவும் ஆன்மீக ரீதியாக ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஓர் உன்னத நிகழ்வாகவும் இக்காட்சியை வர்ணிக்க முடியும் எனக் கூறலாம்.

இதைச் சிறந்த முறையில் நடாத்த தியாக மனப்பான்மையுடன் செயற்பட்ட கனடா திருமறைக்கலாமன்ற உறுப்பினர்களும் நடிகர்களும் பாராட்டுக்குரியவர்களே. இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க உதவிய நெறியாளராகிய இசைத்தென்றல் திரு.ம.யேசுதாசன் அவர்கள் தனது ஆற்றலின் திறமையை நேரகாலத்தையும் பாராமல், வெளிப்படுத்தியுள்ளார் என எடுத்துரைக்கப்பட்டது. ஒலி, ஒளி, பின்னணி இசை, ஒப்பனை, மேடை அமைப்பு எல்லாமே முக்கிய பங்கு பெற்றன. ஒவ்வொரு பார்வையாளரையும் சிந்திக்க வைத்தது "காவியக்களம்" எனக் கூறலாம்.
ஓர் இரசிகர்

நம் உறவுகளுக்கு உதவிட உயிர்ப்பின் விருந்தில் பங்குகொள்ள வாருங்கள்!

தூய ஆரோக்கிய அன்னை பங்கில் திருவிழாக்கள்



ஏப்ரல் 11
இறை இரக்கத்தின் திருநாள்

ஏப்ரல் 18
பேறுபெற்ற யோசப் வாஸ் திருநாள்
மாலை 4.30

மே 02
தூய வளனார் திருநாள்
மாலை 4.30

மே 09
தூய இசிதோர் திருநாள்
மதியம் 12.00

மே 16
பத்திமா அன்னை திருநாள்
மதியம் 12.00

மே 30
தூய பிலிப்பு நேரியார் திருநாள்
மதியம் 12.00

மே 30
அமல உற்பவ மாதா திருநாள்
மாலை 4.30


Grand Opening Soon
மாபெரும் திறப்பு விழா
10 ஆயிரம் சதுர அடி கட்டிடத்தில்
அதி நவீன தொழிநுட்பத்துடனும்
அனுபவம் வாய்ந்த தொழில்
வல்லுனருடனும் விரைவில் புதிய இடத்தில்!
Ideal
Auto Tech
For all your vehicle repair
and service needs.
All Mechanical Services
State of the art Body shop
Muffler & Tire Works
Wheel Alignment
Engine & Transmission Repairs
Towing Services
For More Info:
கூடிய விபரங்களுக்கு:
416.752.LUBE